சைவவித்தியாவிருத்திச்சங்க வெளியீடு. இல. க.

நூ. ப. 4890

நூ. ப. 4890

உ

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

யாழ்ப்பாணச் சமயநிலை.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7, 57 ஆம் ஒழுங்கை
கொழும்பு 6

இது
1872-ம் ஆண்டில்
ஆறுமுகநாவலர் அவர்கள்
எழுதி வெளியிட்டது.

1937.

தி.ப.
4890

உ
சிவமயம்.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

(நாவலர்.)

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திற்கு அன்பளிப்பாக
இந்நூலை வழங்கியவர்

உ

சிவமயம்.

முகவுரை.

நாவலர் 'பச்சைப்படி'யாகச் சொல்லுகிறவர். ஒளித்துமறைத்துச் சொல்லத் தெரியாதவர்; 'குத்த'லாகக் 'கிண்ட'லாகக் 'குறிப்'பாகச் சொல்லத் தெரியாதவர்; 'பூசி' 'மெழுகி'ச் சொல்லத் தெரியாதவர்; இந்தக்காலத்து 'நாகரீக' புருடர்கள்போல.

'பச்சைப்படி'யாகச் சொன்னாலும் சொற்கள் ஊடுருவிப் பாய்வன. குற்றவாளியைக் கொதிக்கச் செய்வன. சத்திர வைத்தியம் செய்து திருத்தம் விளைப்பன. இரக்கத்திலே பிறந்த சொற்கள். நேர்மையிலே விளைந்த சொற்கள். தம்மவர் பிறர் என்று பாரபட்சம் பாராத சொற்கள். அதனால் யாவரையும் கிடுகிடுத்து நடுங்கச்செய்த சொற்கள். யாவருக்கும் திருத்தம் விளைத்த சொற்கள்.

நாவலரைப்போல நமக்காளில்லை. முற்போக்குப் பேச நமக்காட்களுண்டு; சமரசம் பேச நமக்காட்களுண்டு. தேசியக் கிறிஸ்தவர்களுண்டு; பாதிரிசெய்த நன்மையைநோக்கி உருகுவோருண்டு. இக்காலப் போலி நடிப்பை எடுத்துக்காட்ட நமக்காளில்லை. நாவலரைப்போல நமக்காளில்லை.

'யாழ்ப்பாணச் சமயநிலை'யைப் படித்தாவது சிலர் சிந்திக்கட்டும். இக்காலப் போலிநடிப்பைக் கூர்ந்து பார்க்கட்டும். போலியைக் கெடுக்கவும் உண்மையை நிறுத்தவும் சிலர் துடிக்கட்டும். இந்நோக்கமாய் இது வெளியிடப் படுகிறது.

கணபதி துணை.

யாழ்ப்பாணச் சமயநிலை.

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள புரோடெஸ்டாண்டு கிறிஸ்து சமயப் பாதிரிமார்கள் இவ்வியாழ்ப்பாணத்தில் வந்து, சிவன் கடவுளல்லரென்றும், அவர் பிசாசென்றும், வேதாகமங்கள் பொய்ந் நூலென்றும், சைவசமயம் துர்மார்க்கமென்றும், சைவர்கள் அஞ்ஞானிகளென்றும், அவர்கள் பிசாசின் அடிமைகளென்றும், பெருந் தூஷணங்களைப் பேசித் திரிந்து, குருட்டுவழி மும்மூர்த்திலட்சணம் துராசார விருத்தாந்தம் முதலிய பல தூஷண புத்தகங்களை வெகுபணஞ் செலவிட்டு அச்சிற்பதிப்பித்து, அவைகளை ஊர்தோறும் கொடுக்கும்படி சம்பளத்துக்கு உபதேசிமாரை நியமித்து விடுவாராயினார்கள். அவைகளிற் கொடுக்கப்படுவன சிலமாத்திரமே; அவைகளும் வாசிக்கப்படுகின்றனவா? இல்லை இல்லை! பட்டங்களுக்கும் சித்திரவேலைகளுக்கும் சரக்குகள் சேமித்தற்கும் பயன்படுகின்றன. மற்றவைகளெல்லாவற்றையும் அவ்வுபதேசிமார்கள் கல்லுடன் கட்டிப் பாழ்ங் கிணறுகளிலே போட்டுவிட்டு "கொடுத்து விட்டோம்" என்று தெரிவிப்பாராயினார்கள்.

இச்செயல்களினாலே தங்கள் கருத்துச் சித்தியாமையைக் கண்டு, பாதிரிமார்கள் பள்ளிக்கூடங்களைத் தாபித்து, இக்காலத்திலே சீவனத்துக்குப் பெரும்பாலும் வேண்டும் பாஷையாகிய இங்கிலிஷைப் படிப்பிப்பாராயினார்கள். பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடத்தில் இளமைப் பருவத்திலே கற்கப் புகுந்தவர்கள் அநேகர் சைவசமயத்துண்மையை அறியாமையினாலே கிறிஸ்து மதத்திற் பிரவேசித்துவிட்டார்கள். அவர்களிற் பலர், சைவசமயத்துண்மையை அறிந்தபின், பச்சாத்தாபம் அடைந்து, சேதுயாத்

திரை முதலியன பண்ணி, வெளிப்பட விபூதிதாரணம் அநுட்டான முதலியன செய்து வருகின்றார்கள். சிலர் ஒரு சமயத்திலும் விசுவாசமின்றி எல்லாச்சமயமும் பொய்யென்று சொல்லிக் கொண்டு திரிகின்றார்கள். கண்ணீர் பொழியப் பொழியச் சிவன் பிசாசு என்றும் யேசுக்கிறிஸ்துவே இரக்ஷகர் என்றும் கதறிக் கதறித் திரிந்த எத்தனையோ உபதேசிமார்கள் இப்பொழுது குடும்பத்தோடு வெளிப்பட விபூதி தரித்துச் சிவதரிசன முதலியன செய்துகொண்டு திரிவதைக் காணாதவர் யாவர்! சைவசமயத்தை இகழ்ந்துங் கிறிஸ்துசமயத்தைப் புகழ்ந்தும் பற்பல புத்தகங்கள் எழுதி அச்சிற்பதிப்பித்துப் பரப்பிய எத்தனையோ கிறிஸ்தவர்கள் இப்பொழுது குடும்பத்தோடு வெளிப்பட விபூதி தரித்துத் தாங்கள் முன்னே எழுதினவைகள் எல்லாம் அபத்தம் அபத்தம் என்று மறுத்துச் சைவசமயமே மெய்ச்சமயம் என்று பாராட்டிக் கொண்டு திரிவதை அறியாதவர் யாவர்!

இத்தேசத்துள்ள வறியவர்கள் அநேகர் சைவசமயமே மெய்ச் சமயமென்று அறிந்தும், அன்னம் வஸ்திரம் முதலியவை பெற்றுப் படிக்கும் பொருட்டும், உபாத்தியாயருத்தியோகம் பிரசங்கியுத்தியோகம் முதலிய உத்தியோகங்களைச்செய்து சம்பளம் வாங்கும்பொருட்டும், கவர்ண்மெண்டு உத்தியோகங்களினிமித்தம் துரைமார்களிடத்தே சிபாரிசு செய்விக்கும் பொருட்டும், கிறிஸ்து சமயப் பெண்களுள்ளே சீதனமுடையவர்களையும் அழகுடையவர்களையும் விவாகஞ் செய்யும்பொருட்டும், கிறிஸ்து சமயத்திலே பிரவேசிப்பாராயினார்கள்.

இவர்கள், பாதிரிமார்களெதிரே முழங்காற்படியிடுதல் இராப்போசன மெடுத்தல் முதலிய கிரியைகளினாலும், கோடுகளிலே விவிலிய புத்தகமெடுத்துப் பிரமாணம்பண்ணுகையினாலும், கிறிஸ்தவர்கள்போல நடிக்கின்றார்கள். ஆயினும், தங்கள் தங்கள் வீடுகளிலே விபூதிதாரணம் அநுட்டானஞ் செய்துகொண்டும் சைவ சமயக்கோயில்களிலே செய்யப்படுகிற பூசை திருவிழா முதலியவைகளுக்கு வேண்டுந் திரவியங்கள் கொடுத்தனுப்பிக்கொண்டும், தாங்கள் அங்கே மறைவாகப்போய்த் தரிசனஞ்செய்துகொண்டும்,

தங்கள் மனைவியரை அங்கே அனுப்பி, கந்தபுராணங் கேட்பித்துக் கொண்டும், தங்களுக்கும் தங்கள் பெண்டிர் பிள்ளைகளுக்கும் வியாதி வந்தபொழுது பிராமணரிடத்திலும் குருக்கண்மாரிடத்திலும் பணங்கொடுத்து அவரைக்கொண்டு சிவபூசை கிரகசெப முதலியன செய்வித்துக்கொண்டும் வருகின்றார்கள். தங்களுள்ளே இறந்தவர்களுடைய பிரேதத்தைப் பாதிரிமார் அடக்கஞ் செய்தபின், தாங்கள் அவர் பொருட்டுச் சைவக் குருக்கண்மாரைக்கொண்டு அந்தியேட்டி முதலிய கிரியைகளைச்செய்விக்கின்றார்கள். சிலர் தங்கள் விவாகச்சடங்கைப் பாதிரிமாரைக்கொண்டு செய்வித்தபின்பு வீட்டிலே பிராமணரைக்கொண்டுஞ் செய்விக்கின்றார்கள். அவர் பெண்டிர் இறந்தபின், அவர் பிரேதத்தைப் பாதிரிமார் அடக்கஞ் செய்யும்படி வர, கணவர்கள் “நாம் யாதுசெய்வேம் நம் மனைவியினுடைய பிதா மாதாக்கள் நீங்களடக்கஞ் செய்தற்கு உடன்படுகின்றார்களில்லையே தங்கள் சமயக்கிரமத்தின்படி தகனம் முதலியவை செய்யப்போகின்றார்களாம்” என்று சொல்லிப் பாதிரிமாரையனுப்பிவிட்டு, தாங்கள் தங்கள் மாமன் மாமியரிடத்தே இரகசியமாகப் பொருள்கொடுத்து, அவரைக்கொண்டு அந்தியேட்டி முதலியவை நடத்துவிக்கின்றார்கள். சணவன் மனைவி இருவரும் ஒரேசமயத்தாராகாது வெவ்வேறு சமயத்தாராக, இவரிடத்துப் பிறந்த பிள்ளைகள் எச்சமயத்தாரெனப்படுவரோ! நாம் அறியேம்! சில கிறிஸ்தவர்கள் தாங்களே தனித்துப் பொருள் செலவிட்டுச் சைவ சமயக் கோவில்கள் கட்டுவிக்கின்றார்கள். ஒரு கிறிஸ்தவர் தமக்குக் கிடைக்கும் ஐந்துரூபாச் சம்பளம் போதாது என்று நினைந்து, பத்துரூபாச் சம்பளம் ஆக்குவித்துக்கொள்ளும்பொருட்டு, ஒருநாள் தகப்பனாரிடத்திலே ஒரு உபாயஞ் சொல்லிவிட்டுப் பாதிரியார் வீட்டிற்போயிருக்க, தகப்பனார் உடைந்த பானைசட்டிகளையும் சிந்திய அன்னம் பலகாரம் பழ முதலியவைகளையும் ஒரு கடகத்தில்வைத்து ஒரு ஆளுடைய தலையில் ஏற்றி எடுப்பித்துக் கொண்டுபோய்ப் பாதிரியாரெதிரே கோபத்துடன் போட்டு “ஐயா! என்மகனுக்கு நீர் பழக்கின பழக்கம் இதுதானா” என்று கதற, பாதிரியார் அவர் மகனைப் பார்த்து “நீர் ஏன் இப்படிச் செய்தீர்” என்று கோபிக்க, அவர் “நான் போசனஞ் செய்யப்

போனபோது அஞ்ஞானியாகிய என் தகப்பனார் எங்கள் வளவிலிருக்கிற வைரவன் என்கிற பிசாசுக்கு இந்த அன்னமுதலியவைகளைப் படைத்துப் பூசைசெய்வித்துக்கொண்டு நின்றார். கிறிஸ்தவனாகிய நான் பிசாசுக்குப் படைத்த இவைகளைப் போசனஞ்செய்வேனா என்று பானை சட்டிகளை உடைத்து இவ் வன்ன முதலியவைகளைக் காலாலே சிந்திவிட்டேன்" என்று சொல்ல, பாதிரியார் "அஞ்ஞானியே அஞ்ஞானியே! வெளியே போ" என்று அவர் தகப்பனை ஓட்டிவிட்டு, அவர் மகனுடைய செய்கைகளைப்பாராட்டி அவருக்குப் பத்துரூபாச்சம்பளமாக்கினார். சில மாசஞ்சென்றபின் அவர் அப்பாதிரியாருடைய சிபாரிசினாலே சிறந்த கவர்ண்மெண்டு உத்தியோகம்பெற்று, இப்பொழுது வெளிப்பட விபூதி தரித்துக் கதிர்காம யாத்திரைசெய்து, சுக்கிரவார விரதம் கார்த்திகை விரத முதலிய பல விரதங்களை அநுட்டித்துக் கந்தசுவாமி தரிசனம் விடாது செய்துகொண்டு, சாதிமகிமையினும் சிவபத்தி மகிமையினும் தமக்கு உயர்வுமில்லை ஒப்புமில்லை என்று செருக்கித் திரிகின்றார். மற்றொரு கிறிஸ்தவர் தாம் ஓய்வுநாளிலே தமது வயல் உழுததைக் கேள்வியுற்றறிந்த பாதிரியார் தம்மைக் கண்டித்தபொழுது, "நான் உழவில்லை. என் வேலைக்காரன் உழுததைக் கண்டு 'ஓய்வுநாளிலே வேலைசெய்கிறாயா' என்று கோபித்துக்கொண்டு, நான் அவன் சமீபத்திற்போக, அவன் தன்னை நான் அடிக்கவருகிறேன் என்றுபயந்து கலப்பையை விட்டோட, நான் போய்க் கலப்பையைப்பிடிக்க, மாடுகளைத் தடுத்துக்கொள்ளும் வல்லமை எனக்குக் கிழப்பருவத்தினால் இல்லையாக, மாடுகள் உழுத பழக்கத்தில் உழ, அதைக்கண்ட யாரோ நான் உழுதேன் என்று ஐயருக்குச்சொல்லினார்" என்றுசொல்லித் தப்பிக்கொண்டு, பின்னும் எவ்வளவோ காலம் உத்தியோகஞ்செய்து, இப்போது வெளிப்பட விபூதி தரித்துக்கொண்டு தாஞ் சிவஞானி என்று திரிகின்றார். மற்றொரு கிறிஸ்தவர் அமாவாசை விரதத்துக்கு அநுட்டானஞ்செய்து போசனம்பண்ணி, மற்றை இடங்களில் விபூதியை அழித்து விட்டு, நெற்றியில் விபூதியை மாத்திரம் அழிக்க மறந்து பாதிரியார் வீட்டுக்குப் போக, பாதிரியார் "உமது நெற்றியிலே என்ன" என்று கோபிக்க, அவர் "ஒன்றும் விசாரியாமற் கோபித்தால் நான் என்

னசெய்யலாம். நான் வரும் வழியிலே மூன்று அஞ்ஞானிகள் என்னைக்கட்டிப்பிடித்துக்கொள்ள ஒரு அஞ்ஞானி வலாற்காரமாக என்னெற்றியிலே இந்தச்சாம்பரைப்பூசி "அடே நீ இதை உன்பாதிரிக்குக் காட்டு" என்றான். "சாத்தானால் ஏவப்பட்ட அஞ்ஞானிகளுடைய துர்க்கிரியைகளை ஐயருக்கு அறிவிக்கும்படி இப்படி வந்தேன்" என்று பின்னும் நெடுங்காலம் உத்தியோகஞ் செய்தார். மற்றொரு கிறிஸ்தவர் ஒருநாளிராத்திரி விபூதி தரித்துக்கொண்டு போய் மாவிட்டபுரத்துக் கந்தசுவாமிகோயிற் திருவிழாத் தரிசித்து, அதை ஒருபதேசியார் பார்க்கக் கண்டு, உடனே பாதிரியார் வீட்டுக்கு ஓடிப் போய்க் கதவு தட்டி அவரை எழுப்பி, "ஐயா! சாத்தான் என்னை வஞ்சித்துச் சாம்பர் பூசவும் மாவிட்டபுரத்துக் கந்தன் கோயிலுக்குப் போகவும் பண்ணிவிட்டது. என் மனசைத் திருப்பும்படி ஐயர் பரிசுத்தாவியை நோக்கிச் செபம் பண்ணல் வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, உடனே பாதிரியார் விளக்கேற்றுவித்துச் செபம் பண்ணி, அவரையும் அங்கே சயனிக்கச் செய்தார். மற்றைநாட் காலையிலே உபதேசியார் பாதிரியாரிடத்தேபோய் "இராத்திரி இன்னார் சாம்பர் பூசிக்கொண்டு மாவிட்டபுரத்துக் கந்தன் கோயிலிலே நிற்கக் கண்டேன்" என்றார். அதற்குப் பாதிரியார் "இராத்திரியே அவர் இங்கு வந்து, தாஞ் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டதை எனக்குத் தெரிவித்துத் தமக்காகச் செபம்பண்ணும்படி கேட்டார். நானும் அம்மாவும் செபம்பண்ண அவர் மனந் திரும்பிவிட்டது" என்றார். அது கேட்ட உபதேசியார் "பாதிரிமார் இவ்வளவு மடையரோ" என்று உள்ளே நினைந்து, குறுநகை செய்துகொண்டு போனார். இப்படி எத்தனையோ சரித்திரங்கள் நடந்திருக்கின்றன. இருசமயத்துள் ஒன்றிலாயினும் உறுதியின்றி இருசமயத்தையும் சார்ந்துநடக்கும் இப்புரட்டர்கள் கோடுகளிலே சொல்லும் சாட்சியம் யாதாய் முடியும்! இவர்கள் யூரி என்னும் மத்தியஸ்தர்களாயும் நீதிபதிகளாயும் இருந்து செய்யும் வழக்குத் தீர்ப்பு யாதாய்முடியும்!! ஐயையோ! நீதி எப்படி நடக்கும். இதைக் கவர்ண்மெண்டு சிந்தியாதது என்னையோ! அறியேம் அறியேம்!

இந்தப் போலிக் கிறிஸ்தவர்களுடைய செய்கைகளெல்லாவற்றையும் பாதிரிமார்கள் நன்றாக அறிந்திருந்தும், இவ்வுண்மையைத் தங்களை இத்தேசத்துக்கு அனுப்பிய சங்கத்தார் அறிந்தார்களாயின் இங்கே கிறிஸ்து மதம் பரவாது என்று துணிந்து தங்களைச் சுவதேசத்துக்கு வருவித்துக் கொள்வார்களென்றும், மேன்மேலும் தங்களுக்குப் பணம் அனுப்பார்கள் என்றும், தாங்கள் இத்தேசத்திற் போலப் பிறதேசங்களில் அதிக சௌக்கியம் அநுபவித்தல் இயலாதென்றும் பயந்து, இவ்வுண்மையை அவர்களுக்குத் தெரிவியாது, இங்கே கிறிஸ்துசமயம் மேன்மேலும் பெருகுகின்றதென்று முழுப் பொய்யறிவிப்பு எழுதுகின்றார்கள். இன்னார் இன்னார் இன்ன இன்ன காலத்திலே இன்ன இன்ன பிரகாரம் பரிசுத்தாவி புகப்பெற்றுக் கிறிஸ்து சமயத்திலே புகுந்தனர் என்று பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தலுற்ற பாதிரிமார்கள், அவர்களுள், இன்னார் இன்னார் இன்ன இன்ன காலத்திலே இன்ன இன்ன பிரகாரம் கிறிஸ்து சமயத்தை விடுத்துச் சைவசமயத்தைத் தழுவினர், இன்னார் இன்னார் இன்ன இன்ன காலத்திலே தங்களை இன்ன இன்ன பிரகாரம் வஞ்சித்தனர் என்னும் உண்மையையும் அப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தாது வாளாவிருத்தல் யாதுகருத்துப் பற்றியோ! அக்கருத்துச் சிறுவரும் எளிதில் விளங்கக் கிடக்கின்றது.

இந்தக் கிறிஸ்தவர்களுடைய செய்கைகளெல்லாவற்றையும் சைவ சமயக் குருக்கண்மாரும் பிராமணரும் சைவசமயக் கோயிலதிகாரிகளும் நன்றாக அறிந்திருந்தும், தங்களுக்கும் தங்கள் கோயில்களுக்கும் இவர்களாலேயே பொருள்வரவு அதிகமாதலால், இவர்கள் பொருட்டுக் கிரியைசெய்யாவிடினும் இவர்களைக் கோயிலிற் சேர்க்காவிடினும் பொருள் வரவு குறையுமென்று பயந்து சேர்க்கின்றார்கள். ஓகோ! இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்து சமய குருமார் சைவசமய குருமார் என்னும் இருசமயகுருமாருடைய கருத்தும் தத்தஞ் சமயபத்தியை வளர்த்தலினிடத்ததன்று, தத்தம் வயிறுவளர்த்தலினிடத்ததேயாம்.

இந்தியாவிலே தாழ்ந்த சாதியாருள்ளும் ஒருவன் கிறிஸ்தவனாய்விடின், அவனுடைய மாதாப் பிதாச் சகோதரர் தாமும், அவனிடத்தாவது அவனோடு கூட இருந்தாவது அவன் காணவாவது போசனம் பண்ணுவதுமில்லை; அவர் அவனைத் தம்வீட்டிற் சேர்ப்பதுமில்லை; அவன் வீட்டுச் சுபாசுப கருமங்களுக்குத் தாம் போவதுமில்லை; அங்கே கிறிஸ்துசமயத்திற் பிரவேசித்தவன் பிராமணனேயாயினும், அவனிடத்தே விபூதிதரிக்கிற பறையனும் போசனம் பண்ணுகிறானில்லை. இவ்வியாழ்ப்பாணத்திலே பிராமணர்களும் நியமாசாரமுடைய சைவர்களுமாகிய இவர்களொழிந்த மற்றைச் சாமானிய சைவசமயிகள் பலரும் தங்களுள்ளே கிறிஸ்து சமயத்திற் பிரவேசித்தவர்களை விவாகசம்பந்தம் பந்திபோசனம் முதலியவைகளிலே சேர்த்துக்கொள்கின்றார்கள். பிராமணருள்ளும் சைவசமயக் குருக்கண்மாருள்ளும் சிலர், கிறிஸ்து சமயத்திற் பிரவேசித்தவர்கள் பொருட்டுச் சிவாகமக் கிரியைகளைச் செய்யவும், அவர்களைச் சைவசமயக் கோயிலுட் புகுவிக்கவும், உடன்படுகின்றார்கள். இவைகளெல்லாவற்றையும் இந்தியாவிலுள்ள சைவ வைஷ்ணவர்கள் அறிந்து, யாழ்ப்பாணத்தார்களை மிக அவமதிக்கின்றார்கள்! ஐயையோ! இவ்வவமதிப்பு மானிகளாலே எவ்வளவாயினும் சகிக்கற் பாலதன்று. சகிக்கற்பாலதன்று!

உபநயனத்தினாலே துவிசத்துவம்பெற்று வேதத்தில் விதிக்கப்பட்ட கிரியைகளை அநுட்டிக்கும் பிராமணர் முதலிய உயர்ந்த வருணத்தாரே யாயினும், சிவதீக்ஷை பெறாதவராயின், அவருக்குச் சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சைவக் கிரியைகள் இல்லையெனச் சிவாகமங்கள் முழங்கவும், கிறிஸ்து சமயத்திலே பிரவேசித்துச் சிவதூஷகரும் கோமாமிசபக்ஷகருமாகிய பாதிரிமாருடைய வீட்டிலே புசித்தவர்களுக்குச் சைவசமயக் கிரியைகளை நடத்துஞ் சிவத்துரோகிகள் சைவாசாரியர்களாம்! இச் சிவத்துரோகிகளை வெறுத்து நீக்கிவிடாது, இவர்களைக்கொண்டு தீட்சை அந்தியேட்டி முதலியவை செய்விப்போரும், இவர்கள் வீட்டிற் புசிப்போரும், இவர்களைப் பந்தியில் இருத்திப் புசிப்போரும் இவர்களை நமஸ்கரிப்போரும் சைவசமயிகளாம்!! கெட்டி கெட்டி!!

இந்தியாவிலுள்ள பாதிரிமார்கள், தங்கள் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற சைவ வைஷ்ணவப் பிள்ளைகளை விபூதி திருமண் என்னுஞ் சமயசின்னங்களை அழிக்கும்பொருட்டாயினும், தங்கள் விவிலிய நூலைப் படிக்கும்பொருட்டாயினும், தங்கள் பிரசங்கத்தைக் கேட்க வரும்பொருட்டாயினும், வலாற்காரம் பண்ணுகிறார்களில்லை; வலாற்காரம் பண்ணினால் அங்கே கவர்ண்மெண்டாராலும் சுதேசிகளாலும் தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்குப் போய்விடுவார்களென்னும் பயமே அப்பாதிரிமார்களைத் தடுக்கின்றது. இந்தியாவிலுள்ள கவர்ண்மெண்டுப் பள்ளிக்கூடங்களிலும் சுதேசிகளுடைய பள்ளிக்கூடங்களிலும் விவிலிய நூல் படிப்பிக்கிறதில்லை. கவர்ண்மெண்டுப் பள்ளிக்கூடங்களிலே விவிலிய நூல் படிப்பித்தல் வேண்டுமென்று பாதிரிமார்கள் இங்கிலாந்திலுள்ள கவர்ண்மெண்டுக்கு விண்ணப்பம் எழுதினார்கள். கவர்ண்மெண்டு விவிலிய நூல் படிப்பிக்க உடன்படவில்லை. இத்தேசத்திலுள்ள பாதிரிமார்கள், தங்கள் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற சைவசமயப் பிள்ளைகளை விபூதியழிக்கும்பொருட்டு வலாற்காரம் பண்ணுகிறார்கள். விபூதியழிக்க உடன்படாத பிள்ளைகளை வித்தியாசாலையினின்றும் நீக்கிவிடுகிறார்கள். கிறிஸ்து சமய புத்தகங்களையும் சைவ தூஷண புத்தகங்களையுமே நெடுநேரம் படிப்பிக்கின்றார்கள். ஞாயிற்றுக்கிழமையிலே தங்கள் பிரசங்கங் கேட்கவாராத பிள்ளைகளையும் சைவ சமயத் திருநாட்களிலே சைவ சமயக் கோயில்களுக்குப் போகும் பிள்ளைகளையும் தண்டிக்கிறார்கள். இங்குள்ள கத்தோலிக்க குருமார்மாத்திரம் இப்படிப்பட்ட வலாற்காரங்கள் செய்யக் காணேம்.

சில காலத்துக்கு முன்னே கவர்ண்மெண்டார் இத்தேசத்திலே சில இங்கிலிசுப் பள்ளிக்கூடங்களைத் தாபித்துச் சில வருஷம் நடத்தினார்கள். அவைகளிலே கிறிஸ்து சமய புத்தகமொன்றும் படிப்பிக்கப்படவில்லை. அங்கே சைவசமயப் பிள்ளைகளெல்லாரும் விபூதி தரித்துக்கொண்டே படித்துவந்தார்கள். அதைக்கண்ட பாதிரிமார்கள், கவர்ண்மெண்டுப் பள்ளிக்கூடங்கள் நிலைபெற்றால் தங்கள் கருத்து வாய்க்காது என்று நினைந்து, இங்கிருந்த சில துரைமாரைத் தங்கள் வசப்படுத்திக் கவர்ண்மெண்டுக்கு வேறு நியாயங் காட்டி எழுதுவித்து, அப் பள்ளிக்கூடங்களை எடுப்பித்து

விட்டு, அவைகளுக்குக் கவர்ண்மெண்டார் செலவழிக்கும் பணத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களுக்கு ஆக்குவித்துக்கொண்டு, அநீதியாகிய தங்கள் கருத்தையே நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள். கவர்ண்மெண்டுப் பொருளுதவியைப் பெறும் பள்ளிக்கூடங்களிலே விபூதியை அழிக்கும்பொருட்டும், சமய நூல்களைப் படிக்கும்பொருட்டும், சமயப் பிரசங்கத்தைக் கேட்க வரும்பொருட்டும் பிள்ளைகளை வலாற்காரம் பண்ணுதல் கவர்ண்மெண்டாருடைய கருத்துக்கு முழுதும் விரோதமேயாம்.

இப்பொழுது கவர்ண்மெண்டார் இங்கிலிசுப்பாஷையை மாத்திரமன்றித் தமிழ் சிங்களம் என்னுந் தேசபாஷைகளையும் விருத்தி செய்ய விரும்பி, அவைகளின் பொருட்டு வெகு பணஞ்செலவழிக்கின்றார்கள். எந்தச் சமயத்தார் தாபித்த பள்ளிக்கூடங்களையாயினும், அவைகளிலே படிக்கும் பிள்ளைகளை வருஷந்தோறும் பரீக்ஷை செய்வித்து, அப்பரீக்ஷையின் பலத்துக்கு இசைய அந்த அந்தப் பள்ளிக்கூடங்களுக்குப் பொருளுதவி செய்கின்றார்கள். கவர்ண்மெண்டார் பொருளுதவி செய்வது லௌகிகநூற் கல்விக்கன்றிச் சமயநூற் கல்விக்கன்று. சமயநூற் கல்வியை விருத்திசெய்ய விரும்புகின்றவர்கள் தங்கள் தங்கள் முதலைக்கொண்டே அப்படிச் செய்ய வேண்டுமென்பது கவர்ண்மெண்டாருடைய கருத்து. பள்ளிக்கூடங்களுக்குக் கவர்ண்மெண்டாருதவும் பொருள் குடிகளிறுத்த இறைப்பொருளேயாம். இலங்கையிற் குடிகளுள்ளே பெருந்தொகையினர் சைவ சமயிகளும் பௌத்த சமயிகளுமேயாம். புரோடெஸ்டாண்டு கிறிஸ்து சமயிகள் தொகையோ அத்தியற்பம். ஒருசமயத்தாருடைய பொருளைக்கொண்டு அவர் மனசிலே மெய்யெனப் பதிந்த சமயத்துக்குத் தீங்கு விளைப்பதும், பொய்யெனப் பதிந்த சமயத்தை அவரைக்கொண்டு அவர் மனசுக்கு விரோதமாகவும் வலாற்காரமாகவுந் தழுவுவிப்பதும் அநீதி அநீதி! இப்படியெல்லாமிருக்க, புரோடெஸ்டாண்டுப் பாதிரிமார்கள் இங்கிலிசுப் பள்ளிக்கூடங்களோடு பல தமிழ்ப் பள்ளிக்கூடங்களையுந் தாபித்து, கவர்ண்மெண்டாருடைய பொருளுதவியைப் பெற்றுக்கொண்டு, அவைகளை அவர்கருத்துக்கு முழுதும் விரோதமாக நடத்துகின்றார்கள். பாதிரிமாருடைய தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே படிப்பிக்கிற உபாத்தியா

யர்கள் தமிழை நன்றாகக் கற்றுக்கொண்டவர்களல்லர்; அவர்களிற் பெரும்பான்மையோர் சம்பளநிமித்தம் கிறிஸ்துசமயத்திற் புகுந்தவர்கள்; கிறிஸ்து சமயத்திற் புகுந்தமையின் பொருட்டே அவர்கள் உபாத்தியாயருத்தியோகம் பெற்றவர்கள். அங்கே படிப்பிக்கப்படும் புத்தகங்களிற் பெரும்பாலன சுத்தத் தமிழ்நடையின்றி இலக்கணப் பிழைகளினால் நிறைந்தவைகளும் சைவ தூஷணங்களினாற் பொதிந்தவைகளுமாய் உள்ளவைகள். அங்கே படித்தவர்கள் திருத்தமாகிய கல்வியில்லாதவர்களும் ஒரு சமயத்தினும் பற்றில்லாத நிரீச்சுரவாதிகளுமாகுகின்றார்கள். அவர்கள் பேசுந் தமிழோ அன்னிய பாஷை நடையோடு கலந்த அசுத்தத் தமிழ்.

பாதிரிமார்களுடைய இங்கிலிசுப் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற பிள்ளைகள் மாசச் சம்பளம் மும்மூன்று மாசத்துக்கு ஒருதரம் முன்னேறவே கொடுத்துவருகின்றார்கள். அந்தந்தப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் கொடுக்குஞ் சம்பளத்தை மாத்திரங்கொண்டு அந்தந்தப் பள்ளிக்கூடத்தை நடத்திக்கொள்கின்றார்கள். கவர்ண்மெண்டார் கொடுக்கும் பணத்தை அந்தந்தப் பள்ளிக்கூடத்தின் பொருட்டுச் செலவு செய்யாது, தங்கள் சமயவிருத்தியின்பொருட்டுஞ் சுவப் பிரயோசனத்தின்பொருட்டுங் கவர்ந்து கொள்கின்றார்கள். மிஷன் பணத்திலே சம்பளம் பெறவேண்டிய உபதேசிமார்களைப் பள்ளிக்கூடங்களிலே உபாத்தியாயர்களாக ஏற்படுத்திக்கொண்டு உபதேசி சம்பளத்தைத் தாங்கள் யாதோ செய்கின்றார்கள். ஒன்பது மாசத்திற் குறையாவண்ணம் பள்ளிக்கூடத்திலே படித்த பிள்ளைகளை மாத்திரமே பரீக்ஷைக்கு ஒப்பித்தல் வேண்டுமென்பது கவர்ண்மெண்டுச் சட்டமேயாகவும், மூன்று மாசம் நான்குமாச மாத்திரம் படித்த பிள்ளைகளையும், வேறு பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்ட பிள்ளைகளையும் தங்கள் பள்ளிக்கூடத்தில் ஒன்பதுமாசத்திற் குறையா வண்ணம் படித்த பிள்ளைகளென்று மனச்சான்றுக்கு விரோதமாகப் பிரமாணஞ்செய்து, பரீக்ஷைக்கு ஒப்பித்துப் பணம் பெறுகின்றார்கள். சில பாதிரிமார்கள் இடையிடையே தங்கள் செனனதேசத்துக்குப் போய், யாழ்ப்பாணத்திலே பல பெருங் கட்டடங்கள் செய்வித்தல்வேண்டும் என்றுசொல்லி, அங்குள்ள துரை

யாழ்ப்பாணச் சமயநிலை.

மார்களை வஞ்சித்து அவர்களிடத்திலே பெருந்தொகையாகிய பணங்களைத் தண்டல் செய்து கொண்டுவந்து, இங்கே மிகச் சிறுதொகைமாத்திரஞ் செலவிட்டுங் காற்றடித்தால் உடனே கீழேவிழுந்து வெகு பிராணச் சேதஞ் செய்யத்தக்க மிகப் போலியாகிய சில கட்டடங்களை மாத்திரஞ் செய்வித்துவிட்டு, மற்றத் தொகையை இரகசியமாகத் தங்களுக்கு ஆப்தர்களாயுள்ள சில தமிழக் கிறிஸ்தவர்களிடத்தில் ஒப்பித்து, வட்டி வட்டத்துக்குக் கொடுப்பிக்கின்றார்கள். வெட்கஞ் சிறிதுமில்லாமல் இப் படிற்றொழுக்கம் பூண்ட இப் பாதிரிமார்களா பரிசுத்தாவி புகப்பெற்ற மெய்ஞ்ஞானிகள்! இவர்களா தங்கள் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் நல்லொழுக்கம் பழக்குகின்றவர்கள்!

இனிப் பாதிரிமார்களையும் சிவிலுத்தியோகத் துரைமார்களையுஞ் சற்றே ஒத்துப் பார்ப்போம். பாதிரிமார்களோ அதிகசௌக்கியமுடைய நாடு நகரங்கள் தேடி அங்கே வசிக்கின்றார்கள்; துரைமார்களோ சௌக்கியமென்பது சிறிதுங் கிடையாத நாடு காடுகளிலும் வசிக்கின்றார்கள். பாதிரிமார்களுக்கோ அவர்கள் சம்பளமும் அவர்கள் பெண்டிர் சம்பளமும் பிள்ளைகள் சம்பளமுங் கிடைக்கின்றன; துரைமார்களுக்கோ அவர்கள் சம்பளம் ஒன்றே கிடைக்கின்றது. பாதிரிமார்களுக்கோ சுதேசத்துக்குப் போக்கு வரவு செய்கிற கப்பல் யாத்திரைச் செலவு மருந்துச் செலவு முதலியனவெல்லாம் மிஷன் பணத்தினாலே நடக்கின்றன; துரைமார்களுக்கோ அவர்கள் சொந்தப்பணத்தினாலே நடக்கின்றன. பாதிரிமார்களோ மிஷன் பணத்தினால் வாங்கப்பட்ட வீடுகளும் வீட்டுபகரணங்களும் வண்டி குதிரைகளுமே அநுபவிக்கின்றார்கள்; துரைமார்களோ அவைகள் சொந்தப் பணங்கொண்டு விலைக்கேனும் வாடகைக்கேனும் வாங்கிக்கொள்கின்றார்கள். பாதிரிமார்களோ ஊரைவிட்டு எந்த வேலைக்குப் போனாலும் அந்த வேலையெல்லாம் பிரசங்க வேலையெனச் சாற்றிப் படி பெற்றுக்கொள்கின்றார்கள்; துரைமார்களோ கவர்ண்மெண்டு வேலைக்கு மாத்திரமே படி பெறுகின்றார்கள். பாதிரிமார்களுக்கோ ஞாயிற்றுக்கிழமையிலே சிறிதுநேரம் பிரசங்கம் பண்ணுவதன்றி வேறு வேலைகிடையாது; துரைமார்களுக்கோ கவர்ண்மெண்டு வேலைகளில் ஓய்வு கிடையாது. பாதிரி

மார்களோ தங்களையும் தங்கள் பெண்டிர் பிள்ளைகளையும் மிக அல
ங்காரஞ்செய்து, பெருஞ் சிறப்புடைய குதிரைவண்டிகளில் ஏற்றிக்
கொண்டு சாயங்காலத்தில் வீதிகளிலே மிக ஒய்யாரமாக உலாவு
வார்கள்; துரைமார்களுக்கோ அப்படி உலாவுவதற்கு நேரமே
இல்லை; அவர்கள் வெய்யிலென்றும் பாராது மழையென்றும் பா
ராது, ஆபீசுகளுக்கு வண்டியேறிப் போகினும் போவார்கள், கடும்
வெய்யிலாயினுங் காற்றடித்தாற் குடையைச் சுருக்கிக் கக்கத்தில்
இடுக்கிக் கொண்டு போகினும் போவார்கள். பாதிரிமார்களையோ
அவர்கள் வீடுகளிலாயினும் வீதிகளிலாயினும் உயர்ந்த உத்தியோ
கத்தர்களுஞ் செல்வர்களும் வட்டிக்குப் பணங் கேட்பவர்களுமல்
லாத மற்றவர்கள் கண்டு பேச அவர்களுக்குச் சமயங் கிடையாது;
துரைமார்களையோ ஏழைகளும் மிக எளிதிற் கண்டு பேசிக்கொள்
ளலாம். பாதிரிமார்களோ பற்பல சாமான்கள் சுதேசத்திலிருந்து
இங்கு வருவித்தும், இங்கிருந்து சுதேசத்துக்குக் கொண்டு போ
யும் வியாபாரமும் நடத்திக்கொள்ளுகின்றார்கள்; துரைமாருக்கோ
அதற்கு நேரமே கிடையாது. எந்நாளும் இடையறாது கிளம்புங்
கிறிமினல் வழக்குக்களையுஞ் சிவில் வழக்குக்களையும் மிகப் பிரயா
சையோடு விசாரணை செய்து மனம் புண்பட ஆலோசித்துத் தீர்ப்
புச்செய்தலே ஓயா வேலையாக உடைய நீதிபதிகள் தொகை இவ்
வியாழ்ப்பாணத்துக்கு எத்தனை? ஆக நான்கு. வாரத்துக்கொருநா
ட் சிறிது நேரமாத்திரம் பிரசங்கஞ் செய்துவிட்டு ஆறிக் களித்து
வாழும் பாதிரிமார் தொகை இவ்வியாழ்ப்பாணத்துக்கு எத்தனை?
பத்து. இப்பாதிரிமாரைச்சார்ந்த சுதேசகுருமார்கள் தொகை எத்
தனை? மிகப் பெரிது. இப்பாதிரிமாரைச் சார்ந்த உபதேசிமார்கள்
தொகைஎத்தனை? மிகமிகப்பெரிது. ஒரு மணியகாரனுடையஎல்லை
யினுள்ளே இரண்டு மூன்று பாதிரிமார்களும் பெருந்தொகையின
ராகிய சுதேச குருமார் உபதேசிமார்களும் இருக்கவேண்டியதெ
ன்னையோ! ஒரு மணியகாரனுக்குள்ள வேலைகள் எவ்வளவதிகம்
அதிகம்! ஒரு பாதிரியாருக்குள்ள வேலை எவ்வளவற்பம் அற்பம்!
ஒரு மணியகாரனுக்குப் பொருள்வரவு எவ்வளவு அற்பம் அற்
பம்! ஒரு பாதிரியாருக்குப் பொருள் வரவு எவ்வளவு அதிகம் அதி
கம்! கவர்ண்மெண்டார் அரசிறைப் பணத்தை மிகச் சாவதானமா

க மிகச் சுருக்கிச் செலவு செய்ய, இங்கிலாந்திலும் அமெரிக்காவி
லுமுள்ள கிறிஸ்துமத சங்கத்தார் மிக வறியவர்களிடத்தும் அவர்
கள் பசியால் வருந்த வருந்த வாங்கிய பெருந்தொகைத் தருமப் ப
ணங்களை ஒன்றும் விசாரியாது வாரி வாரி இறைப்பது என்னை
யோ! உடுவில், தில்லிப்பழை, மானிப்பாய், பண்டத்தெருப்பு, வ
ட்டுக்கோட்டை என்னும் ஐந்திடங்களும் ஒன்றுக்கொன்று எவ்
வளவோ அதிக சமீபமானவைகள். இவ்வைந்திடங்களுக்கும் ஐந்
து பாதிரிமார்கள் இருக்கின்றார்கள். இவ்வைந்திடங்களுக்கும் இ
ன்னும் சிலவிடங்களுக்கும் ஒரு பாதிரியாரே போதியவர். மற்றப்
பாதிரிமார்கள், சமீபத்திலே பாதிரிமார் இல்லாத முல்லைத்தீவு,
வன்னிப்பற்று, அநுராசபுரம் முதலிய ஊர்களிலே போய், அங்
கே வாசஞ் செய்துகொண்டு, அங்குள்ள சனங்களை மோட்சத்தி
ற் சேர்க்கலாமே! அப்படிச்செய்ய நினையாதது என்னையோ! இவ்
வூர்களிலே போல அவ்வூர்களிலே சல சௌக்கியமும் நல்ல நல்ல
பழவர்க்கங்களுங் கிடையா என்று நினைந்தோ! இவ்வூர்களிலே
போல அவ்வூர்களிலே ஒருவருக்கொருவர் அதி சமீபத்திலிருந்து
கொண்டு அடிக்கடி ஒருவரோடொருவர் கலந்து உண்டாட்டுக்களி
யாட்டுச் செய்ய இயலாதே என்று நினைந்தோ! சல சௌக்கியமு
ம் நல்ல நல்ல பழவர்க்கங்களுங் கிடையாத ஊர்களில் வசிக்கின்றவ
ர்கள் சுவிசேஷப் பிரசங்கங் கேட்பினும் நித்தியநரகமே அடைவா
ர்களென்பது தேவசித்தமென்று நினைந்தோ! பாதிரிமார்கள் தாங்
கள் சௌக்கிய மில்லாதவைகளென்று வெறுத்துவிட்ட ஊர்களி
லே கத்தோலிக்க குருமார்கள் வசிப்பதறியார்களா! அம்மட்டோ
அங்கே சிவிலுத்தியோகத்தர்களும் வசிக்கின்றார்களே! தாங்கள்
தங்கள் சென்ன தேசத்தையும் சுற்றத்தாரையும் விடுத்து இங்கே
வந்தது, இங்குள்ள அஞ்ஞானிகளுடைய ஆன்மசுகத்தின் பொரு
ட்டேயென்று பேசும் பாதிரிமார்கள் வசித்தற்கு அஞ்சுகின்ற
அசௌக்கிய பூமிகளிலே, தாங்கள் இங்கு வந்தது தங்கள் சரீரசுக
த்துக்கு ஏதுவாகிய திரவியஞ் சம்பாதித்தற் பொருட்டேயென்று
பேசுந் துரைமார்கள், அஞ்சாது வசிக்கின்றார்களே! பாதிரிமார்
களை யோக்கியர்களென்போமா! துரைமார்களை யோக்கியர்களென்
போமா! சென்னதேசத்திலுஞ் செல்வர் பிள்ளைகளாய் இருந்து

வந்தவர்கள் அசௌக்கிய பூமியிலும் வசிக்கின்றார்கள்; சென்ன தேசத்திலே கிழிந்த சப்பாத்துத் தைத்துப் பிழைப்பவர் பிள்ளைகளாய் இருந்து வந்தவர்கள் சௌக்கிய பூமியே நாடுகின்றார்கள்.

இடம்பமென்பது சிறிதும் இல்லாமல் எல்லாருந் தங்களைக் காண்பதற்குந் தங்களோடு பேசுதற்கும் எளியர்களாய், எல்லாருக்கும் பணிவு காட்டி, காடு நாடென்பது பாராது எங்கெங்குந்திரிந்து, தங்களை யாவர் வையினும் வாழ்த்தினுஞ் சமமெனக்கொண்டு, வீடுதோறும் போய்க் கிறிஸ்துமதத்தைப் போதித்தலே தங்கள் கடமையாகவும், இப்பாதிரிமார்கள் நடக்குந்திறம் இப்படியா!! நல்லது நல்லது!! இப்படித்தான் கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் நடந்தார்களா! கெட்டி கெட்டி! புதிய ஏற்பாட்டிலே அந்தப் பகுதிமாத்திரம் பார்த்ததில்லையா!

பாதிரிமார்கள் இத்தேசத்துச் சில பாலியர்களைக் குருமார்களாக்கி, றெவறெண்டுப் பட்டங் கொடுத்துவிட்டார்கள். இங்கே நெல் அரிசி முதலியவையெல்லாம் ஒறுக்க ஒறுக்க, றெவறெண்டுப் பட்டமொன்றே மலிந்தது. இச் சுதேச குருமார்கள் இங்கிலிசுஞ் செவ்வையாக அறியார்கள்; தமிழுஞ் செவ்வையாக அறியார்கள்; கிறிஸ்துசமயமும் அறியார்கள்; சைவசமயமும் அறியார்கள், தங்களிடத்தே யாராயினும் மதவிஷயத்தைக் குறித்துச் செய்யும் ஆட்சேபங்களுக்குச் சமாதானஞ் சொல்ல வகையறியாத இவர்கள் யார்மனதைத் திருப்பமாட்டுவார்கள்! கிறிஸ்துமத போதனைக்கென்று தங்களுக்குக் கிடைக்கிற சம்பளத்தினாற்றானே சீவனம்பண்ணுகிற தங்கள் பிதா மாதாச் சகோதரர்களைத்தானுங் கிறிஸ்துமதத்திலே புகுவிக்க மாட்டாத இவர்கள், வேறு யாரைக்கிறிஸ்துமதத்திலே புகுவிக்கமாட்டுவார்கள்! சைவ சமயத்தை வேரோடே களைதற்கென்று தங்களுக்குக் கிடைக்கிற சம்பளத்திற்றானே தங்கள் பிதா மாதாச் சகோதரிகள் கந்தபுராணம் படிப்பித்தற்கும் சைவசமயக் கோயிற் பூசை திருவிழாக்கள் செய்வித்தற்கும் பொருளுதவி செய்கிற இவர்கள், வேறு யாருக்குச் சைவ சமயம் பொய்யென்று போதிக்கமாட்டுவார்கள்! தாங்களே இராத்திரியில் வேறு வேஷம் போட்டு விபூதி தரித்துச் சனநெருக்கத்தினுள்ளே

புகுந்து திருவிழாத் தரிசிக்கின்றார்களே! அறிந்தவர் யாரேனுங் கைப்பிடித்து "இது என்ன காணும்" என்று கேட்கும்பொழுது அவர் தாடியைத் தடவி "பேசாதேயும் பேசாதேயும்" என்கிறார்களே! தங்கள் பெண்டிர் பிள்ளைகளுக்கு நோய் வந்தபொழுது சாதகமெடுத்துக் கொண்டு, இராத்திரியிலே பதுங்கிப் பதுங்கிச் சோதிடர்வீடு திரிகின்றார்களே! இப்படியெல்லாஞ் செய்துகொண்டும், தாங்கள் எங்கெங்குந்திரிந்து கிறிஸ்துமதப் பிரசங்கஞ் செய்கின்றார்களென்றும், அப்பிரசங்கத்தைப் பலரும் விரும்பிக் கேட்கின்றார்களென்றும், இன்ன ஊரிலே ஒரு பிராமணன் தங்களோடு சமயவாதஞ்செய்து தோற்றுவிட்டான், இன்ன ஊரிலே ஒரு பிராமணன் தங்கள் பிரசங்கத்தைக்கேட்டுப் பரிசுத்தாவியினாலே மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற ஆயத்தமாக இருக்கிறான் என்றும், பாதிரிமார்களைப் பிரீதிப்படுத்தும் பொருட்டுப் பலவகைப்பட்ட பொய்களெல்லாம் நிறைந்த அறிவிப்புக்கள் எழுதி அச்சிற் பதிப்பித்துப் பரப்புகின்றார்கள்.

வண்ணார்பண்ணையிலுள்ள வெஸ்லியன் மிஷன் இங்கிலிசுப் பள்ளிக்கூடத்தில் ஒரு வண்ணாப்பையன் மூன்று நான்குவருஷம் படித்தவன். இவ்வருஷத்திலே மற்றப்பிள்ளைகள் "இவ்வண்ணானை எங்களோடிருத்திப் படிப்பிக்கின் நாங்கள் இப் பள்ளிக்கூடத்தை விட்டு விடுவோம்" என்றார்கள். அதுபற்றி முதலுபாத்தியாயர், தாங்கிறிஸ்தவராயிருந்தும், வண்ணானைத் தள்ளிவிட்டார். வண்ணான் பறங்கித்தெருவிலிருக்கிற வெஸ்லியன் பாதிரியாரிடத்தே போய், தனக்குக்கிறிஸ்துமதமே சம்மதமென்றும், தனக்கு ஞானஸ்நானஞ்செய்து தன்னை அங்குள்ள வெஸ்லியன் பள்ளிக்கூடத்திற் சேர்த்துக்கொள்ளல் வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டான். பாதிரியார், தாம் அதற்கு உடன்பட்டும், அவனைச் சேர்த்துக்கொள்ளும்படி தமக்குக் கவர்ண்மெண்டு ஏசண்டு எழுதிய கடிதம்பெற்றும், அப்பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுஞ் சுதேச குருமாரும் உபாத்தியாயர்களும் உடன்படாமையால், வண்ணானைச் சில காலம் அடிக்கடி அலைத்துப் பின்பு ஓட்டிவிட்டார். அவன் இப்போது நெடுந்தூரத்திலுள்ள கத்தோலிக்கப் பள்ளிக்கூடத்திலே போய்ப் படிக்கிறான். இப்பாதிரியார், அப்பள்ளிக்கூடத்திற்றானே

க,அசளம் ௵ ஒரு நளப்பையன் படித்தலைக்கண்டு ஏறக்குறைய ஐம்பது பிள்ளைகள் ஓட்டெடுக்கவும் அந்நளப்பையனைத் தள்ளாத பாதிரியாரைப் பித்தரென்று நினைந்தாரோ! நளவனினுந் தாழ்ந்த சாதி வண்ணனென்று கொண்டாரோ! சாதிவேற்றுமை பாராட்டுதல் கிறிஸ்துநாதருக்குஞ் சம்மதமென்று விவிலிய நூலில் எங்கேயாயினும் இப்போது கண்டாரோ! வண்ணனுடைய ஆன்மாப் பரமண்டலங்களில் இடம்பெறுதென்று தேவதூதன் சொப்பனத்தில் வந்து சொல்லக் கேட்டாரோ! தேவவாக்கினும் பெரிது மனிதவாக்கென்றும், மனிதவாக்குள்ளுங் கவர்ண்மெண்டு ஏசண்டு வாக்கினும் பெரிது தம்மைச் சேவிக்குஞ் சுதேச குருமார் உபாத்தியாயர்கள் வாக்கென்றுந் தெளிந்தாரோ! வண்ணனைப்பற்றி மற்றப்பிள்ளைகளெல்லாம் ஓடிவிட்டால், அவர்கள் இறுக்குஞ் சம்பளத்தினாலும், அவர்கள் பொருட்டுக் கவர்ண்மெண்டார் உதவும் பணத்தினாலுந் தமது பை நிரம்பாதேயென்று பயந்து விட்டாரோ! யாழ்ப்பாணத்திலே சாதிவேற்றுமை அறுத்துக் கிறிஸ்து மதத்தை நாட்ட வல்லவர்கள், பொருள் வாஞ்சைப் பிசாசாவேசிகளாகிய இந்தப் பாதிரிமாரும் சுதேச குருமாருந்தானே! சபாசு! சபாசு!

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமுள்ள சங்கத்தார்கள் நடுவுநிலைமையிற் சிறந்த சில கம்மிஷனர்களை இத்தேசத்துக்கனுப்பி, மிக நன்றாக விசாரணை செய்விப்பார்களாயின், பாதிரிமார்களையும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்தவர்களையுஞ் சுட்டி நாம் இங்கே எழுதினவைகளெல்லாஞ் சத்தியஞ் சத்தியம் என்பது அவர்களுக்கு மிக நன்றாக விளங்கும். அமையும். இனிமேல் அப்பால் நடப்போம்.

இப்பொழுது அமெரிக்கன் பாதிரிமார் வட்டுக்கோட்டையிலே ஜவ்நாக் கலீசு எனப் பெயர்பெற்ற ஒரு இங்கிலிசுப் பள்ளிக்கூடந் தாபித்திருக்கின்றார்கள். இதற்கு நம்முடைய சைவசமயிகளுள் அநேகர் பொருளுதவி செய்திருக்கின்றார்கள். இவர்கள் சமயாபிமானம் இருந்தபடி என்னை! இவர்களுக்கு யாது கதி! பள்ளிக்கூடச் சம்பளமும் போசனச் செலவும் நக்கான்கு மாசத்துக்கு ஒருதரம் முன்னேறவே கொடுத்துவிட்டுப் பாதிரிமார் வீட்டிலேயே நாளுசாதியாரோடுங் கூடப் போசனஞ் செய்துகொண்டு படித்தற்கும், விபூதி தரியாதொழிதற்கும், கிறிஸ்துசமயநூல்கள் படித்தற்கும், ஞாயிற்றுக்கிழமையிற் கிறிஸ்துமதப் பிரசங்கங் கேட்டற்கும், உடன்பட்ட பிள்ளைகள் மாத்திரமே இந்தப் பள்ளிக்கூடத்திலே படிப்பிக்கப்படுகின்றார்கள். இதனால், நம்முடைய சமயாசாரத்தையுஞ் சாதியாசாரத்தையுங் கெடுத்தற்குங் கிறிஸ்துசமயத்தை விருத்தி செய்தற்குமே, இந்தப் பள்ளிக்கூடந் தாபிக்கப்பட்டதென்பது, இனிது விளங்குகின்றது. முற்காலத்திலே இங்கிலிசுக்குப் பாதிரிமார் பள்ளிக்கூடங்களன்றி வேறுபள்ளிக்கூடங்கள் இல்லாமையினாலும், அன்னவஸ்திரமும் புத்தகமுங் கல்வியும் உபகாரமாகக் கிடைத்தமையினாலும், இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள வறியவர்கள் அநேகர் பாதிரிமார் வீட்டிலே போசனஞ் செய்துகொண்டு படித்தார்கள். இக்காலத்திலே கவர்ண்மெண்டார் கொடுக்கும் பொருள்கொண்டும் பிள்ளைகள் கொடுக்குஞ் சம்பளங் கொண்டும் நடத்தப்படும் பள்ளிக்கூடங்கள் பல உள்ளனவேயாகவும், கவர்ண்மெண்டுப் பொருளுதவி கிடையாவிடத்தும், பிள்ளைகள் சம்பளமாத்திரங்கொண்டு பள்ளிக்கூடஞ் சிறப்பாகநடத்தப்படத்தக்கதேயாகவும், இந்தியாவிலுள்ள கலீசுகளிலே படித்துப் பரீக்ஷையிற் சித்திபெற்ற சமர்த்தர்கள் உபாத்தியாயர்களாக அகப்படுதற்கு எளியர்களேயாகவும், நம்முடைய சைவசமயிகளுள்ளே சிலர் அன்னம் வஸ்திரம் புத்தகம் கல்வி முதலியவற்றின் பொருட்டுத் தாங்களே தங்கள் கைப்பணத்தை இறுத்தும், தங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார் வீட்டிலே கீழ்சாதியாரோடும் போசனஞ் செய்வித்துச் சாதியாசாரத்தையுஞ் சமயாசாரத்தையும் இழப்பித்து, அவர்களோடு தாங்களுங்கலந்து, அவ்விரண்டையும் இழக்கின்றார்களே! இவர்கள் இப்படிச் செய்தும், எதிரிகளெதிரே தலை குனியாது, தாங்கள் சைவசமயிகளென்றும், உயர்ந்த சாதிமான்களென்றும், சிறிதும் நாணமின்றித் தலையெடுப்புடனே பாராட்டத் தொடங்குகின்றார்களே! சீச்சீ! இஃதென்ன மதிமயக்கம்!

இவர்கள், அப்பாதிரிமாருக்கு இறுக்கும் பொருளிற் குறைந்த தொகைப் பொருள்கொண்டே, தங்கள் பிள்ளைகளைச் சென்னபட்டணத்திலுங் கும்பகோணத்திலுமுள்ள கவர்ண்மெண்டுக் கலீசுகளுள் ஒன்றில் விடுத்து, இங்கிலிசுக்கல்வியின் மாத்திரமன்றித் தமிழ்க்கல்வியினுஞ் சாதியாசாரத்தினுஞ் சமயாசாரத்தினும் நாகரிகத்தினும் நன்றாகத் தேர்ச்சியடைவித்துக்கொள்ளலாமே. மலையோடு சிறுமண்மேட்டுக்குப்போல இந்தியாவில் கலீசுகளோடு இந்தக் கலீசுக்கு வேற்றுமை பெரிதாமென்பதை ஆராய்ந்தறியாத பேதைகளை யாது செய்யலாம்! சென்னபட்டணத்திலுள்ள சாமானியமாகிய ஒரு பள்ளிக்கூடத்துக்குத் தானும் இந்தக் கலீசு சமமாகாதே! தங்கள் பணத்தை இறுத்தும், திருத்தமாகிய கல்வித்தேர்ச்சியும் பெறாது, தங்கள் சாதிநிலை சமயநிலைகளும் இழந்து, அவமதிக்கப்படும் இவர்கள் அறியாமை இருந்தபடி என்னை யென்னை! பாதிரிமாருடைய சலீசுக்குத் தக்க பொருளுதவிசெய்தவர்களுள்ளே சிலர், தங்கள் பிள்ளைகள் தங்கள் வீட்டிலே போசனஞ் செய்துகொண்டு போய், அக்கலீசிலே படித்தற்குப் பாதிரிமார் உடன்படாமையைக் கண்டு, வெட்கப்பட்டுச் சும்மா இருக்கின்றார்கள்! இவர்கள் தாங்கள் கொடுத்த பணத்தைப் பாதிரிமாரைத் தொடர்ந்து வாங்காது ஏன் சும்மா இருக்கின்றார்கள்! வெள்ளை முகத்துக்குப் பயந்தோ!

இந்தக் கலீசின்பொருட்டு ஒரு பெரும்பொய் மாணசாசனம் படைக்கப்பட்டதும், "ஒரு பிராமணகுருவே தம்முடைய பெருந்தொகையாகிய ஆஸ்திகளெல்லாவற்றையுங் கிறிஸ்துசமயக் கலீசுக்கு எழுதிவிட்டு மரித்தது தேவசித்தமன்றோ கிறிஸ்துசமயமே மெய்ச் சமயமென்பதற்கு வேறு பிரமாணமும் வேண்டுமோ" என்று சில பாதிரிமார்களும் பல கிறிஸ்தவர்களும் பற்பலரெதிரே பாராட்டினதும், அப்பத்திரம் பொய்ப்பத்திரமெனப்பட்டு, அப்பத்திரம் படைத்திட்டுக்கொண்டவர்கள் சுப்பிறீங்கோட்டாராலே தண்டிக்கப்பட்டதும், அவர்கள் தண்டிக்கப்பட்டதற்கு இரங்கியிரங்கிப் பாதிரிமாருடைய சமாசாரபத்திரிகையொன்று தேம்பித் தேம்பிப் புலம்பினதும், அறியாதார் யாவர்! பாதிரிமாருடைய சகவாசமும் இங்கிலிசும் விவிலிய நூலுஞ் சற்றுமுற்றறியா

த பிராமணகுருவே தம்முடைய ஆஸ்திகளெல்லாவற்றையும் இந்தக் கலீசுக்கு எழுதும்படி செய்தது என்று துணிந்து சொல்லப்பட்ட தேவசித்தமானது, விபூதியையுஞ் சிவாலய தரிசனத்தையும் மறந்து இந்தக்கலீசிலே பாதிரிமாரோடு சகவாசஞ்செய்துகொண்டு இங்கிலிசும் விவிலியநூலுங் கற்குஞ் செல்வர் பிள்ளைகள் ஒவ்வோர் சமயம் வாய்க்கும்பொழுது தங்கள் ஆஸ்திகளெல்லாவற்றையும் இந்தக் கலீசுக்கு எழுதும்படி செய்யமாட்டாதா! இதைப் பிள்ளைகளுடைய பெற்றாரும் உற்றாருஞ் சற்றே யோசிக்கக்கடவர். "நான் விளைவேலிச் சுப்பிரமணியக்குருக்களிடத்திலே போய் 'உமக்குப் பிள்ளை இல்லாமையினால் நீர் உம்முடைய ஆஸ்திகளெல்லாவற்றையும் யாழ்ப்பாணக் கலீசுக்கு எழுதிவிடும்' என்று சொல்லியதற்கு அவர் உடன்பட்டவர்; ஆதலால் மாணசாசனம் மெய்யாகவே இருக்கலாம்" என்று சொல்லித் திரிந்த ஒரு கிறிஸ்தவரும் இந்தக் கலீசிலே ஒருபாத்தியாயர் உபாத்தியாயர்! என்னென்ன சம்பவிக்குமோ! சாவதானம் சாவதானம்!!!

பொய்வழக்குப் பேசுதல், பொய்ப்பிரமாணம் பண்ணுதல், பொய்ப்பத்திரம் படைத்தல், சாராயங்குடித்தல், அக்கை தங்கை மாமி மருமகள் பேர்த்தி என்கிற வரம்பு முறை கடந்து கலியாணஞ்செய்தல், கடவுளில்லை ஆன்மாவில்லை மோட்ச நரகமில்லையென்று வாதித்தல், பாம்புக்குத் தலைகாட்டி மீனுக்கு வால்காட்டும் விலங்குபோலச் சைவருக்குச் சைவராயுங் கிறிஸ்தவராயும் நடித்தல் முதலிய இப்பெருங் கொடுந் தீமைகளெல்லாம் இவ்வியாழ்ப்பாணத்திலே வர வர யாராலே தலைபட்டோங்குகின்றன! பாதிரிமாராலே சீர்திருத்தம் உண்டாயிற்று என்று பாராட்டுவோர் தங்கள் தங்கள் மனச்சான்றை வினவினால் அஃதுண்மை பேசும் பேசும். யாதாயினும் ஒரு சமயத்திலே நிலைகொண்ட பற்றில்லாதவரிடத்தே மனத்தொடுசார்ந்த நல்லொழுக்கந் தலைப்படுமா! இந்நல்லொழுக்கத்தொடு சாராத கல்வித்திறமையும் புறவேஷங்களுஞ் சீர்திருத்தமெனப்படுமா! முற்காலத்தில் இவ்வியாழ்ப்பாணத்திலே இராக் கள்ளர் தொகையோ மிகப்பெரிது; பகற்கள்ளர் தொகையோ மிகச்சிறிது. ஏழைகளெல்லாருங் கூலிவேலைசெய்து எளிதிற் சீவனஞ்செய்யும் பொருட்டாகிய தெருவேலைகளும் பாலவே

லைகளுந் தென்னந்தோட்ட வேலைகளும் பெருகப் பெருக, இராக்கள்ளர் தொகை மிகச் சுருங்கிவிட்டது. பாதிரிமார்கள் கல்விமுதலியவற்றின் பொருட்டுத் தங்களை அடுத்தவர்களை அவரவர் மனச்சான்றுக்கு விரோதமாகவே நடக்கும்பொருட்டு வலிந்து வலிந்து ஏவ ஏவ, நிரீச்சுரவாதமும் போலிச்சமயநடையுந் தலைப்பட்டன. அவை தலைப்படத் தலைப்படப் பகற்கள்ளர் தொகை மிகப் பெருகிவிட்டது. இராக்கள்ளருக்குத் தப்புவது எளிதெளிது! பகற்கள்ளருக்குத் தப்புவது அரிதரிது! தாஞ் சிறிதுகாலத்தின்முன் வைரவரைப் பிசாசென்று அவர் சந்நிதிக்கண் அன்னாதிகளைக் காலாலே சிந்திய ஊரிற்றானே யாருமறியத் தாமே பொருள் செலவழித்துக் கந்தபுராணம் படிப்பிக்கத் தொடங்கிவிட்டுக் கலியாணப்படிப்புச் சபையிலே வெகுசனங்கள் கண் காணக் குளோப்பு விளக்குகளை உடைத்துக் கந்தபுராண புத்தகத்தை ஐயைய இங்கேசொல்லப்புகின் நெஞ்சந் திடுக்கிட வாய் கூசும் அவமதிபுரிந்து தம்மை வருந்திப் பெற்று வளர்த்த தகப்பனாரைப் பேசாப் பேச்செல்லாம் பேசிக் கையாலறைந்துவிட்டுந் தாமே பரம யோக்கியரென்று தலையெடுப்பொடு திரிவோரும், தமக்கு மேலதிகாரியாகிய துரை தமது சொல்லுக்குச் செவிகொடுப்பவரென்று பொய்சொல்லி அவருக்கு அபகீர்த்தி விளைத்து உலகத்தாரை வஞ்சித்துக் கைக்கூலி வாங்கி அதுபற்றி விளைந்த கிறிமினல் வழக்குக் காரணமாக வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தையும் வாரிக்கொண்டு சென்றாற்போலக் கைக்கூலிப்பொருள் முன்னைப் பொருளையும் செந்நிறப் பெண்ணொருத்தியைக் காட்டிக் கருநிறச் சகோதரியை விவாகஞ்செய்து கொடுத்ததனாற் கிடைத்த பொருளையும் வாரிக்கொண்டு செல்லப் பின்னரும் நெடுங்காலம் தம்மாலே வெகுசனங்கள் துயருழக்கும் ஊழ்வசத்தாலோ பிறிது காரணத்தாலோ வழக்கு விசாரணையின்றி ஒழிய இராசதண்டத்துக்குத் தாம் ஒருவாறு தப்பிக்கொண்டு தாந்தப்பினமைக்குக் காரணந் தாஞ் செய்த கதிர்காமயாத்திரை முதலியனவென்று சொல்லிக் கந்தசுவாமிமீது கைக்கூலிவாங்கற் குற்றமேற்றி அம்மட்டினில்லாது கதிர்காமசுவாமி நனவிலுந் தம்மோடு கலந்து பேசுகின்றாரென்று பிதற்றித் திரிவோரும், தாஞ் சுப்பிறீங்கோட்டு யூரிமார்களுள் ஒருவராக ஏற்பட்டுக்கொ

ண்டு முறைப்பாடு காரணையும் மறியற்காரணையுந் தனித்தனி கண்டு "உன்பக்கந் தீர்ப்புச் செய்வேன் உன்பக்கந் தீர்ப்புச்செய்வேன்" என்று சொல்லித் தமது பிள்ளையைச் சுட்டிச் சத்தியம்பண்ணி இருபக்கத்தாருந் தம்மைத் தள்ளுவியாவண்ணம் உபாயஞ்செய்துவிட்டுத் தீர்ப்பு எவன் பக்கஞ் செய்யப்பட்டதோ அவனைக்கண்டு அது தம்மாலாயதென்று மகிழ்ச்சி காட்டியும் அவன் பகைவனைக் கண்டு அது தமது பிரயாசைக்கு மாறாக மற்றயூரிமாரால் ஆயதென்று துக்கங் காட்டியும் வம்பு செய்து திரிவோருமாகிய பகற்கள்ளர் உயர்ந்த கவர்ண்மெண்டு உத்தியோகத்தில் இருப்பாராயின், எழைகள் எப்படித்தான் பிழைப்பார்கள்! எப்படித்தான் பிழைப்பார்கள்!!! இப்பகற் கள்ளர், இம்மட்டோ, இங்கிலிசுகாரரைப் பிரீதிப்படுத்தும் பொருட்டு அவருடைய "குசினிப்" பறையர் கொடுத்த கோப்பியும் உவைனுங் குடித்துவிட்டுச் சைவசமயக் கோயில்களினுள்ளே நுழைந்து அவைகளைப் பாழாக்குகின்றாரே! கோயிற் குருமார் இவரைக் கோயிலினுள்ளே நுழையவொட்டாது தள்ளித் திருவீதிப்புறத்தில் ஓட்டுவியாததென்னையோ ஆகா! ஓகோ! கோயிற்காணிக்கை குறையுமென்று பயந்தோ! பயந்தோ!!

இந்தியாவிலே சைவ வைஷ்ணவத்தை விடுத்துக் கிறிஸ்துசமயத்திலே புகுந்தவன் எவ்விடத்தும் எக்காலத்தும் எல்லாரெதிருங் குடும்பத்தோடுங் கிறிஸ்து சமயியே. யாழ்ப்பாணத்தில் ஒருவனே சிலரெதிரே சைவசமயி; வேறு சிலரெதிரே கிறிஸ்துசமயி. ஒருவனே ஒருவரெதிரேதானே சிலநாட் சைவசமயி; சிலநாட் கிறிஸ்துசமயி; திரும்பவுஞ் சிலநாட் சைவசமயி; திரும்ப நிரீச்சுரவாதி. ஒருவனே யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது கிறிஸ்துசமயி; இந்தியாவுக்குப்போனபோது அங்கே சைவசமயி; திரும்பி யாழ்ப்பாணத்துக்கு வந்தபின் தன்னை இந்தியாவிற் கண்ட யாழ்ப்பாணத்தாரெதிருங் கிறிஸ்து சமயி. யாழ்ப்பாணத்தார்களுள்ளே சிலர் பழி பாவங்களுக்கு அஞ்சாது இப்படி நடத்தலினாலும், வேறு பலர் இவர்களைக் கண்டித்துத் தள்ளிவிடாது இவர்களோடு கலத்தலினாலும், இங்குள்ளாரெல்லாருக்கும் அவமதிக்கற்பாடு உண்டாயிற்று.

சென்னபட்டணத்தார்கள் சிலவருஷத்துக்கு முன் இங்கிலாந்துக் கவர்ண்மெண்டுக்கு எழுதி அச்சிற் பதிப்பித்து அனுப்பிய ஒரு விண்ணப்பத்திலே, இலங்கையிலுள்ளவர்கள் ஆதியிலே இந்தியாவினின்றுங் குடியேறிய மிகத் தாழ்ந்த சாதியார்கள் என்றும், அவர்களுக்கு யாதொரு சமயமும் இல்லைஎன்றும், அவர்களுக்குச் சமயமென்பது அங்கவஸ்திரம் போலும் என்றும், அதுபற்றி அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களிலே விவிலியநூற் பாடம் படிப்பிக்க உடன்பட்டார்கள் என்றும், இந்தியாவிலுள்ளவர்களாகிய தாங்கள் பண்டுதொடங்கிச் சாதியாசாரமுஞ் சமயாசாரமும் வழுவாத உயர்குலத்தார்கள் என்றும், அதுபற்றித் தாங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விவிலியநூற் பாடம் படிப்பிக்க விடமாட்டார்கள் என்றும், எழுதியிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள சைவசமயிகளே! உங்களிடத்துள்ள அன்பு மிகுதியினாலே நாஞ் சொல்பவைகளைக் கேளுங்கள். நீங்கள் சிவதீட்சை பெற்றும் என்னை! விபூதி ருத்திராக்ஷ தாரணம், பஞ்சாட்சரசெபம், சிவாலய தரிசனம் இவைகளை நியமமாகச் செய்தும் என்னை! அந்தியேட்டி சிராத்த முதலியவைகளைச் செய்தும் என்னை! வருஷந்தோறுங் கந்தபுராணங்கேட்டும் என்னை! சிதம்பராலய தருமத்தின் பொருட்டு அளவுகடந்த ஆஸ்திகளைக் கொடுத்தும் என்னை! வருஷத்துக்கு இரண்டுதரஞ் சிதம்பரயாத்திரை செய்தும் என்னை! சேது முதலிய புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்தும் என்னை! ஊர்தோறுங் கோயில் கட்டுவித்துப் பூசை திருவிழாக்கள் செய்வித்தும் என்னை! சிவராத்திரி கந்தசட்டி கார்த்திகை சுக்கிரவாரமுதலிய விரதங்களினாலும் அங்கப் பிரதக்ஷிணத்தினாலும் உடம்பை வருத்தியும் என்னை! நீங்கள் உங்கள் சமயக்கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும், ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும், சிவபெருமானை வழிபடும் முறைமையையும், அதனாலே பெறப்படும் முத்தியின் இலக்கணங்களையும், கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகின்றீர்களில்லை. உங்கள்

பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்களில்லை. உங்கள் கோயில்களிலே சிவபத்தியை வளர்த்தற்கு ஏதுவாகிய வேதபாராயணம் தேவார திருவாசக பாராயணம் சைவசமயப் பிரசங்கம் முதலிய நற்கருமங்களைச் செய்விக்கின்றீர்களில்லை. காமம் கோபம் சண்டை உயிர்க்கொலை முதலிய பெருந் தீமைகளை வளர்த்தற்கு ஏதுவாகிய பொதுப்பெண்களுடைய நடனசங்கீதம் வாணவிளையாட்டு முதலிய துர்க்கருமங்களிலே உங்கள் பெரும்பொருளைப் பெருமகிழ்ச்சியோடு செலவு செய்கின்றீர்கள். உங்கள் கோயிற் கோபுரங்களிலுந் தேர்களிலும் பார்க்கத்தகாத நிருவாணப் பிரதிமைகளைச் செய்விக்கின்றீர்கள். உங்கள் கோயிற் பந்தர்களிலே நிருவாணமாயும் காமவளர்ச்சிக்கு ஏதுவாயும் உள்ள சித்திரங்கள் எழுதப்பட்ட காகிதங்களை ஒட்டுவிக்கிறீர்கள். கோயிற் சுவர்களிலே அப்படிப்பட்ட சித்திரங்களை எழுதுவிக்கிறீர்கள். கேட்கத்தகாத சிற்றின்பப் பாட்டுக்களைப் படிப்பிக்கின்றீர்கள். இதுபற்றி விளையும் பெருங்கேடுகளையும், இதுபற்றி அன்னிய தேசத்தாராலும் அன்னிய சமயத்தாராலும் உங்களுக்குக் கிடைக்கும் எல்லைகடந்த அவமதிப்பையும், இன்னும் நீங்கள் எட்டுணையேனுஞ் சிந்திக்கின்றீர்களில்லை. நீங்கள் பாதிரிமாரும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்தவர்களுஞ் செய்யும் பெருங் கொடுஞ் சிவதூஷணங்களை அஞ்சாது கேட்கின்றீர்கள். பாதிரிமார்கள் உங்களை வஞ்சிக்கும்படி உங்கள் வீடுகளுக்கு அனுப்புகிற பெண்களுடைய மையல் வலையில் நீங்கள் அகப்பட்டு, அவர்கள் செய்யுஞ் சிவதூஷணங்களைக் கேட்டு அவர்களுக்கு உங்கள் பொருளை வாரி வாரி இறைக்கின்றீர்கள். உங்கள் கைப்பொருளையே இறுத்து உங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதி அழித்துவிட்டுப் போய்ச் சிவதூஷணபுத்தகங்களைப் படிக்கவுஞ் சமயாசாரத்தையுஞ் சாதியாசாரத்தையும் இழக்கவும் பண்ணுகிறீர்கள். நீங்கள் இப்படிச் செய்வீர்களாயின், நீங்கள் செய்பவைகளென மேற்சொல்லப்பட்ட சிவ புண்ணியங்களினால் யாதொரு பயனும் உண்டாகாதே! பிரமா விட்டுணு முதலிய தேவர்களும் இருஷிகளும் தாங்கள் சிவபூசை சிவதரிசன முதலிய சிவ புண்ணியங்களை நியமமாகச் செய்பவர்களாய் இருந்தும், தக்கன் யாகத்தில் அவன் செய்த சிவதூஷணங்களைக் கேட்டுக்கொண்டிரு

ந்த பாவத்தினாலே அநுபவித்த பெருங் கொடுந் துன்பங்களெல்லாம், நீங்கள் வருஷந்தோறும் பொருள் செலவிட்டுக் கேட்குங் கந்தபுராணத்தினாலே நன்றாக அறிந்திருக்கின்றீர்களே. நாஞ் சொல்லவேண்டுவதென்னை!

சைவசமயிகளே! நீங்கள் உங்களை யாதோரிடையூறும் அடையாவண்ணம் ஆளுகிற கவர்ண்மெண்டாருக்கு வருஷந்தோறும் இறுக்கும் வரிப்பணந் தொண்ணூறு சதமாகிய அத்தியற்பத் தொகையன்றோ! இவ்வரிப்பணங் கொண்டன்றோ, நீங்கள் வேண்டுமிடமெங்கும் அதிசௌக்கியத்தோடும் எளிதிலே சோத்தக்க தெருக்கள் செப்பமிடப்படுகின்றன! இப்படியாகவும் நீங்கள் இவ்வத்தியற்பத் தொகையாகிய வரிப்பணத்தைத் தண்டலாளராகிய அதிகாரிகளைப் பலதரம் அலைத்துவிட்டுப் புறங்கூறியும் மிக்க மனவருத்தத்தோடும் இறுக்கின்றீர்கள். செப்பமிடப்படாத தெருக்களைச் செப்பமிடுவிக்கும் பொருட்டும், தெருக்கள் இல்லாத இடங்களிலே தெருக்கள் அமைப்பிக்கும் பொருட்டும், அடிக்கடி கவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பம் எழுதி, அவர்களிடத்து ஓயாவேலை வாங்குகிறீர்களே. ஓகோ! இவ்வியல்புடைய நீங்கள், உங்கள் சைவசமய குருமார்களுக்குக் காலந்தோறும் அரிசி பருப்புப் பால் தயிர் நெய் முதலிய பதார்த்தங்களும் வஸ்திரங்களும் ரூபாக்களுஞ் சிறிதுந் தடைபேசாது வந்தனத்தோடுங் கொடுக்கின்றீர்கள். கொடுத்தும் என்னை! அவர்களிடத்தே யாது வேலை வாங்குகின்றீர்கள்! அவர்கள் உங்களுக்காயினும் உங்கள் பிள்ளைகளுக்காயினும் உங்கள் சமயத்தையும் நல்லொழுக்கத்தையும் போதிக்கின்றார்களா? உங்கள் கோயில்களிலே சைவசமயப் பிரசங்கஞ் செய்கின்றார்களா? பள்ளிக்கூடங்களைத் தாபித்து உங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றார்களா? உங்களுள் யாராயினுங் கிறிஸ்து மதத்திலே பிரவேசிக்கப் போகும்பொழுது பரிதபித்து அவருக்குச் சைவசமயத்தினது மகிமையையுங் கிறிஸ்துசமயத்தினது இழிவையும் அறிவித்து அவரைத தடுக்கின்றார்களா? உங்களுக்குத் தீக்ஷை செய்யுமிடத்துத் தக்ஷிணையை வாங்கிக்கொண்டு உடனே ஓட்டம்பிடிப்பதன்றிச் சிலநாளாயினுந் தாமதித்திருந்து உங்களுக்கு அநுட்டானமுஞ் சமயாசாரமும் பழக்குகின்றார்

களா? உங்கள் வீட்டுக்கு வந்தபொழுது உங்கள் செல்வப் பெருமை உத்தியோகப் பெருமைகளையுந் தங்கள் பொருண்முட்டுப்பாடுகளையும் வீண்வார்த்தைகளையும் பேசுவதேயன்றிச் சிவபெருமானுடைய பெருமையையுஞ் சைவசமயங் குன்றுதலையுஞ் சுட்டியாதாயினும் பேசுகின்றார்களா? அநுட்டான முதலியவைகளை நீங்கள் கிரமமாகப் பயின்றிருக்கின்றீர்களோ என்று உங்களை எப்பொழுதாயினும் பரீட்சிக்கின்றார்களா? உங்களுள் யாராயினும் இறக்கும்பொழுது அங்கே வந்து அவரான்மா நற்கதி அடையும்பொருட்டு அவருக்கு நல்லறிவுறுத்துகின்றார்களா? உங்கள் சமயத்தைப் பாதிரிமார் கண்டிக்கும்பொழுது அவர்களை எதிர்த்து அவர்கள் சமயத்தைக் கண்டித்து உங்கள் சமயத்தை நிறுத்தத் தொடங்குகின்றார்களா? உங்கள் குருமார்களுள் யாரொருவரேனும் எப்பொழுதாயினும் உங்களுள் யாரொருவரையேனும் பார்த்து "நீ கொலைசெய்யாதே; களவெடாதே; மதுபானம் பண்ணாதே; மாமிசம் புசியாதே; பொய்பேசாதே; வியபிசாரஞ் செய்யாதே; சூதாடாதே" என்று வாய் திறந்ததுண்டா? நல்லது நல்லது!! உங்கள் வந்தனமும் பொருளும் பெறாத பிறர் சிலர் உங்களுக்கு நன்மை செய்யப் புகுந்தவிடத்து அதற்கு இடையூறு பேசாமலாயினும் இருக்கின்றார்களா? இல்லையே! மாதா வயிற்றிற் சிசுவும் அம்மாதாவினாலுங் கொல்லப்படாவண்ணஞ் சாவதானமாக ஆணை நடாத்தும் அரசினருக்கு வருஷத்திலே தொண்ணூறு சதங் கொடுக்கப் பின்னிட்டொளிக்கிற நீங்கள், உங்களுக்கு யாது நன்மையுஞ்செய்யாத போலிக்குருமாரைக் கும்பிட்டுக் கும்பிட்டு அவர் வேண்டுவனவெல்லாம் உவப்போடு கொடுப்பதென்னையோ! அறியேம் அறியேம்!!

சைவசமயிகளே! கணக்கர், கொல்லர், தச்சர், கன்னார், தட்டார், மேளகாரர், வண்ணார், அம்பட்டர், சக்கிலியர், பறையர் முதலிய பலதொழிலாளர் மரபிற் பிறந்தவராயினும், அவ்வத் தொழில் அறியாதவரை அறிந்தவரெனக்கொண்டு அவ்வவருக்குப் பொருள் கொடுத்து, அவ்வத்தொழில் செய்விக்கச் சொப்பனத்திலாயினும் நினைக்கின்றீர்களா? இல்லையே! இவ்வாறாகவும், சைவ

குருமரபிற் பிறந்தவராயினும், சைவசமய குருத்துவத்துக்கு அவசியம் வேண்டிய சைவசித்தாந்த நூலுணர்ச்சியுஞ் சைவக்கிரியைகளை மந்திரக் கிரியா பாவனை வழுவாவண்ணஞ் செய்யுந் திறமையுஞ் சைவசமய போதனையும் இல்லாதவரைச் சைவசமய குருமாரெனக் கொண்டு, உங்கள் கைப்பொருளை அவருக்கு இறைத்துவிட்டு, அவரிடத்தில் வேலை வாங்காது பராமுகர்களாய் இருப்பது நீதியா? தவசிப்பிள்ளைகளுந் தங்கள் தொழிலிலே பரீட்சை கொடுத்தே தவசிப்பிள்ளைகளாகுகின்றார்களே! பரீட்சை சிறிதும் வேண்டாத உத்தியோகமாவது, உலகமுழுதாளும் அரசரும் பெறாத வந்தனாதிகளைப் பெறும் மிக மேன்மை பெற்ற உத்தியோகமாகிய சைவசமய குருவுத்தியோகம் ஒன்றேயாய் முடிந்ததே! இஃது என்னையென்னை! கொடுமை கொடுமை!

சைவசமயிகளே! கிறிஸ்து சமயகுருமாராகிய பாதிரிமார்கள் தங்கள் பாஷையையும் அதற்கு மூலபாஷைகளையும் இலக்கண இலக்கிய கணித தருக்க பூகோள ககோளாதிகளையுந் தங்கள் சமயநூல்களையும் படித்துத் தேர்ந்து பரீட்சையிற் சித்திபெற்று நெடுந்தூரத்தினின்றும் இங்கு வந்து, நம்முடைய தேசபாஷைகளையும் நீதிநூல்களையுஞ் சமயநூல்களையுஞ் சிறிதாயினும் படித்துப் பிரசங்கிக்கின்றார்களே! உங்கள் சமய குருமாருள்ளே சிலரொழிய, மற்றவர்கள் அந்தியேட்டிப் பட்டோலைதானும், இன்னுஞ் சொல்லின் அந்தியேட்டியென்னும் பெயர்தானும், பிழையற எழுத அறியார்களே! கெட்டிகெட்டி!! சிவாகமத்தில் ஒரு சுலோகமாயினுந் தேவார திருவாசகங்களில் ஒரு பாட்டாயினுந் திருவள்ளுவரில் ஒரு குறளாயினும் அறியாத மனிதப்பதர்களுஞ் சைவசமயகுருமாராம்! சமணசமயத்துச் செட்டிச்சி விக்கிரகத்தின் இருபக்கத்தும் விநாயகக்கடவுள் விக்கிரகமுஞ் சுப்பிரமணியக்கடவுள் விக்கிரகமும் அஞ்சாது வைத்துப் பூசை உற்சவமுதலியன செய்கிற அதிபாதகர்களுஞ் சைவசமய குருமாராம்! "சிவலிங்கமாவது பரமசிவனுடைய குறி சாபத்தால் அழுகி விழுந்தது" என்று அஞ்ஞானப் பாதிரிகள் போல நெஞ்சந்திடுக்கிடாது வாய் கூசாது பேசுகிற புலையருஞ் சைவசமயகுருமாராம்! சமணசமயக்

கடவுளாகிய அருகன் மேலே பாடப்பட்ட திருநூற்றந்தாதியிற் செய்யுளைப் பார்த்திருந்தும் அதன் பொருளை அறியாமலுந் திருநூறென்பதற்குந் திருநீறென்பதற்கும் பேதந்தெரியாமலும் "திருநூற்றந்தாதியிலே விபூதியின் மகிமை சொல்லப்படுகின்றது; அதில் ஒரு புத்தகம் வாங்கித்தாமாட்டீரா" என்கிற அசேதனதிலகர்களுஞ் சைவசமய குருமாராம்! "மாணிக்கவாசகர் பாடின திருவாசகம் ஒன்று வாங்கினேன்; அவர் பாடின தேவாரம் ஒன்று வாங்கித்தாமாட்டீரா? என்கிற மூடசனேந்திரர்களுஞ் சைவசமய குருமாராம்! "பரமசிவனுடைய ஐந்து முகங்களுள்ளே ஈசான முகம் ஊர்த்துவமுகமென்று சொல்லியிருக்கின்றதே! ஊர்த்துவமுகமாவது அண்ணாந்துகிடக்கிற முகமாமே! அப்படியானால் அபிஷேகம் பண்ணும்பொழுது தீர்த்தம் மூக்கினுள்ளே போமே! போனாற் சுவாமிக்குச் சலதோஷங் கொள்ளுமே! இதற்கு யாது பண்ணலாம்" என்கிற அஞ்ஞான சிரோமணிகளுஞ் சைவசமய குருமாராம்!

தோட்டவேலை, வயல்வேலை, வியாபாரம், உத்தியோக முதலிய தொழில்கள் செய்து சீவனம் பண்ணுகிற உங்களுள்ளுஞ் சிலர், ஒழிவுள்ள நேரங்களிலே சைவசமய விஷயங்களை ஆசையோடு படித்தாயினுங் கேட்டாயினும் அறிகின்றார்களே! உங்கள் சைவசமய குருமாருக்கு என்ன வேலை! நீங்கள் வருந்திச் சம்பாதித்துக் கொடுக்கக் கொடுக்க, அவர்கள் எளிதில் வாங்கி உண்டுடுத்துக்கொண்டு வெட்கஞ் சிறிதுமில்லாமல் மாப்பிளை மாடுகள் போலத் திரிகின்றார்களே! சைவ சாத்திர முதலியவற்றைப் படித்தற்கு அவர்களுக்கு வேண்டிய நேரம் இருக்கின்றதே! அப்படியிருக்கப் படியாமல் அவர்கள் வீண்பொழுது போக்குகின்றார்களே! இனியாயினும் படிக்கும்பொருட்டு நீங்கள் தயைகூர்ந்து அவர்களுக்கு நல்லபுத்தி சொல்லமாட்டீர்களா? அவர்கள் தங்களுக்குப் படிக்கச் சத்தியில்லையானால், படித்தவர்கள் பல சைவசாத்திரப் பொருள்களைத் திரட்டிச் சிறுவரும் எளிதில் அறியும்படி செய்கிற பிரசங்கங்களைக் கேட்கும்பொருட்டாயினும், நீங்கள் அவர்களுக்குப் புத்திசொல்லலாகாதா? பிரசங்கங் கேட்க நம்முடைய குரு

மார்கள் கூசுகிறார்களே என்பீர்கள்போலும். பிரசங்கங் கேட்டுக் கேட்டுப் புத்திமான்களாய்ப் பிறருக்கும் போதித்து நன்கு மதிக்கப்பட்டுக் களிப்புற்றுத் திரிவது நல்லதோ! பிரசங்கங் கேட்கக் கூசிக் கூசிப் பிரசங்கங்கேட்ட பிறரெதிரே தங்கள் ஊத்தை வாயைத் திறந்து தங்கள் அறியாமையை வெளிப்படுத்தி அவர்களாலே கண்டிக்கப்பட்டும் அவமதிக்கப்பட்டுஞ் செருக்கிழந்து தலை குனிந்து பதுங்கித் திரிவது நல்லதோ! குலங் கல்வி அறிவு ஒழுக்கஞ் செல்வங் கௌரவ முதலிய பலவற்றானும் தங்களினும் உயர்ந்த பிராமண குருமார் முதலாயினோர் பேரானந்தத்தோடு வந்திருந்து கேட்பதறிந்துந் தாங்கள்கேட்கக் கூசுவதென்னையோ! ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரமுடுத்து விபூதி ருத்திராக்ஷந் தரித்த சைவசமயிகள் பலர் கூடியிருக்கிற உத்தம சபைகளிலுந் திருக்கோயில்களிலும் போய்க் கௌரவத்தோடும் இருந்து சிவசாத்திரப் பிரசங்கஞ் சிவபுராணப் பிரசங்கங் கேட்கக் கூசுகிற இச்சைவ குருமூர்த்திகள், தங்கள் சென்ன தேசத்திலே செல்வர்கள் சமூகத்திலும் உத்தியோகத்தர்கள் சமூகத்திலும் அரையணா ஒரு அணாப் பூரி வாங்கும்பொருட்டு நெருக்குண்டுந் தள்ளுண்டும் அடியுண்டும் அவமானப்படக் கூசாததென்னையோ! அம்மட்டோ, தங்கள்சீடர்கள் கிறிஸ்தவர்களாய்ச் சிவநிந்தகர்களாய்ப்போனபின்னும் அவர்கள் வீடுகளிலே போய்ச் சமயம்பார்த்து யாசித்து வயிறு வளர்க்கக் கூசாததென்னையோ! அம்மட்டோ, கீழ்சாதியாரோடும் ஒரே பாயிலிருந்துகொண்டு சொக்கட்டான் காகிதம் விளையாடக் கூசாததென்னையோ! அம்மட்டோ, தம்மிடத்து வருந் தூர்த்தர் ஒருவருக்கொருவர் தகப்பன் மகன் என்பதும் நோக்காது, பாட்டன் பேரன் என்பதும் நோக்காது, மாமன் மருமகன் என்பதும் நோக்காது, தமையன் தம்பி என்பதும் நோக்காது குரு சீடன் என்பதும் நோக்காது, உபாத்தியாயன் மாணாக்கன் என்பதும் நோக்காது அவர் தம்மின் மிக மூத்தவர் மிக இளையவர் என்பதும் நோக்காது, அவர் தம்மின் மிகத் தாழ்ந்த சாதியாரென்பதும் நோக்காது போகம் விற்றுண்ணும் பொதுப்பெண்களுடைய வீட்டிலே நுழைதற்குக் கூசாததென்னையோ! அம்மட்டோ, பேதிவியாதிக்காலத்திலே சனங்களை வஞ்சிக்கும்பொரு

ட்டு வெறியாட்டாடிய பொதுமகளிருக்கு உருத்திராபிஷேகஞ்செய்து தீபாராதனை பண்ணி நமஸ்கரித்து அவர்கள் கையினின்றும் விபூதி வாங்கக் கூசாததென்னையோ! அம்மட்டோ, உருத்திரகணிகையருடைய இலக்கணங்கள் இவை இவையெனச் சிவாகமங்கள் சொல்லவும், பொதுப்பெண்களை உருத்திர கணிகையரெனக் கொண்டு, கோயில்களில் வைத்து அவர்கள் பொருட்டுச் சிவத்திரவியங்களை எடுத்துபயோகிக்கக் கூசாததென்னையோ! அம்மட்டோ, பிறர்மனைவியரைச் சகோதரிகளாகவும் உருத்திரகணிகையரை மாதாக்களாகவும் பாவித்தொழுகல் வேண்டும் என்று சிவாகமங்களுஞ் சிவபுராணங்களும் விதிக்கவும், அவ்விதி கடந்து தங்கள் மனசைத் தங்கள் பொறிபோன வழியே போக்கக் கூசாததென்னையோ! அம்மட்டோ, தங்களிடத்தே தீக்ஷைபெற்ற பெண்கள் தங்களுக்குப் புத்திரிகளென்பதை எவ்வளவாயினுஞ் சிந்தியாதவர்களாய் வரம்புகடந்தொழுகக் கூசாததென்னையோ! உங்கள் குருமாருள் அநேகர் இத்தீமைகளுக்கெல்லாங் கூசார்கள்; சுவாமி சந்நிதானங்களிலே நமஸ்காரம்பண்ணவும், உத்தரீயமெடுக்கவும், தலைக்கட்டை எடுத்துவிட்டு உருத்திராக்ஷமாலை தரிக்கவும், தாளந்தட்டித் தேவாரமோதவும், சிவசாத்திரப் பிரசங்கஞ் சிவபுராணப் பிரசங்கங்கள் கேட்கவும், சிவசாத்திர சிவபுராணங்கள் படிக்கவுங் கூசுவார்கள். உங்கள் குருமாருள்ளே யோக்கியருக்குங் கும்பிடு அயோக்கியருக்குங் கும்பிடு யோக்கியருக்கும் பாதகாணிக்கை அயோக்கியருக்கும் பாதகாணிக்கையானால், திருத்தம் எப்படி உண்டாகும்! யோக்கியரை உயர்த்தி அயோக்கியரைத் தாழ்த்தினாலன்றோ, அயோக்கியர் தொகை குறையக் குறைய, யோக்கியர் தொகை அதிகப்படும்.

சைவசமயிகளே, பொய், களவு, நம்பிக்கைத்துரோகம், கற்பழித்தல், வீடுகொளுத்துதல் முதலிய தீமைகளுள் ஒன்றுடையவனையுஞ் சம்பளம் பெறாத தவசிப்பிள்ளையாகத்தானும் வைத்துக்கொள்ளுதற்கு ஒருவருஞ் சம்மதியாரே! இத்தீமையெல்லாம் ஒருங்குடையவரையும் மோட்சவழி காட்டுங் குருமாரெனக்கொண்டு வழிபடுதற்கு நீங்கள் எவ்வளவேனுங் கூசக்காணேமே!

உங்கள் குருமாருள்ளே கல்வியும் நல்லொழுக்கமும் உடையவர் சிலர் உளரேயாயினும், அவர்கள் தங்கள் கடமையை உங்களுக்கு எவ்வளவேனுஞ்செய்யக் காணேமே! சிலகாலத்துக்குமுன் இருந்த கிறிஸ்துசமய குருமாருள்ளே சிலர், தங்களைத்தூஷித்தல் கல்லாலெறிதல் அடித்தல் முதலிய தீமைகளைச் செய்தவர்களுக்குந் தங்கள் சமயத்தைப் போதித்தார்களே! உங்கள் சைவசமய குருமாரோ, தங்களைக் கண்ட கண்ட இடமெல்லாஞ் செருப்புக் கழற்றியும், உத்தரீயமெடுத்தும், வாய் புதைத்தும், ஆசனத்திருத்தியும், சுவாமீ சுவாமீ அடியேன் அடியேன் என்று அடியற்ற மரம்போல விழுந்து நமஸ்கரித்தும், தங்கள் பாதசமீபத்தில் ரூபாக்களைக் கலகலெனக் கொட்டியும் வழிபட்டொழுகுந் தங்கள் சீடர்களுக்குந் தங்கள் சமயத்தைப் போதிக்கின்றார்களில்லையே!

சைவசமயிகளே! உங்கள் கோயில்களிலே பொதுமகளிருடைய நடனசங்கீதம் வாணவிளையாட்டு முதலியவைகளை ஒழித்துவிடுங்கள். திருவாணமாயும் காமத்தை வளர்த்தற்கு ஏதுவாயுமுள்ள பிரதிமைகளையும் படங்களையும் அமைப்பியாதொழியுங்கள். கோயில்களிலே சைவப்பிரசங்கம், வேதபாராயணம், தேவார திருவாசக பாராயண முதலியவைகளைச் செய்வியுங்கள். உங்கள் குடும்பத்தோடு நியமமாகப்போய்ச் சைவப்பிரசங்கங் கேளுங்கள். இலமாயுள்ள கோயில்களைப் புதுக்குவியுங்கள். ஒன்றுக்கொன்று சமீபத்தினதாகப் பல கோயில்களைக் கட்டுவியாதொழியுங்கள். நித்தியபூசைக்கு முதற் பொருள் சேருமுன் கோயில்கட்டுவிக்கத் தொடங்காதொழியுங்கள். நித்திய பூசைக்குப் பொருள் இல்லாத கோயில்களிலே இடம்ப நிமித்தந் திருவிழாவைத் தொடங்காது நித்தியபூசையைக் கிரமமாக நடத்துவியுங்கள். சைவசமயத்துக்கு முழுதும் விரோதமாகிய மதுபானம் மாமிசபோசன முதலிய தீமைகள் தலைப்படாவண்ணம் விலக்குங்கள். நீங்கள் வியர்வையொழுகப் பலவித முயற்சிகளினால் வருந்திச் சம்பாதித்த பொருளைக் கூத்துமுதலிய வேடிக்கைகளிலும் பொய்வழக்குகளிலுஞ் செலவு செய்து, பழி பாவங்களைத் தேடிக்கொள்ளாது, இம்மை மறுமைகளுக்கு உபயோகமாகிய கல்வி விருத்தியிலே செலவு செய்து, புக

ழ்புண்ணியங்களைத் தேடிக்கொள்ளுங்கள். கல்வியறிவொழுக்கங்களினாற் சிறப்புற்ற மேலோர்களையே உங்களுக்குக் குருமாராக ஏற்படுத்திக்கொள்ளுங்கள். கல்வியறிவில்லாதவர்களையும் நல்லொழுக்கமில்லாதவர்களையுங் குருமாரெனக்கொள்ளாது தள்ளிவிடுங்கள். உங்கள் குருமாரினருள்ளே கல்வியறிவில்லாதவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுக்கவேண்டாம் என்று நாஞ் சொல்லவில்லை. அவர்களைத் திருநந்தனவனம் வைத்தல், புஷ்பமெடுத்துத் திருமாலை கட்டித் திருக்கோயிலுக்குக் கொடுத்தல், திருக்கோயிலிலே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவீதியிற் புல்லைச் செதுக்குதல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்யப்பண்ணி, அவர்களுக்கு அன்னவஸ்திரங்கொடுங்கள். சிவாகமவுணர்ச்சியாலன்றிப் பெறப்படாத குருத்துவஞ்செய்ய ஒட்டாதேயுங்கள். அவரவர் தகுதிக்கேற்ற வேலைகொடுத்து அவரவரைப் போஷிப்பதே நீதி. பரமசற்குருவாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் பதினாறாயிரந் திருக்கூட்டத்தோடு சிவாலயங்களெங்குந் தாளந்தட்டித் தேவாரமோதியருளினமையைப் பெரியபுராணத்தால் அறிந்திருந்தும், தாங்கள் சுவாமி உற்சவங்கொண்டருளும்பொழுது தாளந்தட்டித் தேவாரமோதக் கூசுகின்ற பெரும்பாவிகளைச் சைவகுருமாரெனக்கொண்டு வழிபடாமலும் காணிக்கைகொடாமலும் வெறுத்து ஓட்டிவிடுங்கள். ஆலயப் பிரதிட்டை முதலிய கிரியைகளைச் சிவாகமத்தில் வல்ல பெரியோர்கள் பலரையிருத்திக்கொண்டு, அவர்களோடு கலந்து ஆலோசித்து, மந்திரக் கிரியா பாவனைகள் வழுவாவண்ணம் நடத்துவியுங்கள்.

சைவசமயிகளே! பாதிரிமார்களும் அவர்களைச்சார்ந்த கிறிஸ்தவர்களுஞ்செய்யுஞ் சிவதூஷணங்களைக் கேளாதொழியுங்கள். உங்கள் பிள்ளைகளை அவர்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதியழித்துவிட்டுப் போய்ச் சிவதூஷண புத்தகங்கள் படித்தற்கு அனுப்பாதொழியுங்கள். ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்து, உங்களுள்ளே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைக்கொண்டு அவைகளை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களிலேயே அனுப்பி லௌகிகநூல்களையும் நீதிநூல்களையுஞ் சை

வசமய நூல்களையும் படிப்பியுங்கள். சாதாரணக்கல்வி விசாரணைத் தலைமைத்துரைக்கு விண்ணப்பமெழுதிக் கவர்ண்மெண்டாரிடத்திலே பொருளுதவிபெற்று, லௌகிகநூற் கல்வியை விருத்திசெய்யுங்கள். அதற்குப் பாதிரிமார்கள் இடையூறு செய்யின், நீங்களெல்லாந் திரண்டு கொழும்புக் கவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதிக்கொள்ளுங்கள். அதற்குக் கொழும்புக் கவர்ண்மெண்டார் பராமுகர்களாயிருப்பின், இங்கிலாந்துக் கவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதிக்கொள்ளுங்கள். இந்தியாவையாளும் இங்கிலாந்துக் கவர்ண்மெண்டாரே இலங்கையையும் ஆளுகின்றனர். இந்தியாவிற் குடிகளனுப்பும் விண்ணப்பங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கு நன்மைசெய்யும் கவர்ண்மெண்டார், இலங்கையிற் குடிகள் விண்ணப்பமனுப்பினால், அதைச் சீர்தூக்கிப் பார்த்து நன்மை செய்யாது விடுவார்களா? குற்றம் உங்களிடத்ததேயன்றிக் கவர்ண்மெண்டாரிடத்ததன்று.

ஆதியிலே சோழமண்டலத்தினின்றும் பாண்டிமண்டலத்தினின்றும் தொண்டைமண்டலத்தினின்றும் பிராமணர் முதலிய சாதியார்கள் தமிழரசர்களோடு திருக்கோணமலையினும் யாழ்ப்பாணத்தினும் வந்து குடியேறினார்களென்று திருக்கோணமலைப்புராணமுங் கைலாசமாலையுஞ் சொல்கின்றன. இந்தியாவிலே பிராமணருள்ளும் நியமாசாரமுடைய செட்டிவேளாளருள்ளுங் கிறிஸ்துமதத்திலே புகுந்தவர்கள் பலர்; இத்தேசத்திலே இச்சாதியார்களுள்ளே இதுவரையுங் கிறிஸ்துமதத்திலே புகுந்தவர் ஒருவருமிலர். இந்தியாவிலே இங்கிலீசென்றாற் பறையரோடிருந்து படித்தற்குங் கூசாதார் பிராமணருள்ளும் பலர்; இத்தேசத்திலே வண்ணாரோடிருந்து படித்தற்கும் உடன்படாதவர் அசற்சூத்திரருள்ளும் பலர். இந்தியாவிலே சிவபுராணப் பிரசங்கஞ் செயப்படுங் கோயில்கள் மிக அரியன; இத்தேசத்திலே அது செயப்படாக் கோயில் இல்லை. இந்தியாவிலே வித்துவான்கள் சைவசமயக்குருமார் முதலியோருள்ளுங் கந்தபுராண முதலியன அறிந்தவர் சிலர்; இத்தேசத்திலே பெண்களுள்ளும் அவையறியாதார் இலர். இந்தியாவிலே சுவாமிசந்நிதானங்களிலே சட்டையிட்டுக்கொண்டும்,

போர்த்துக்கொண்டும், அங்கவஸ்திரந் தரித்துக்கொண்டும், சோமொட்டிக்கொண்டும், குடை பிடித்துக்கொண்டும், வண்டி குதிரையேறிக்கொண்டும் அவமதிப்போடு போவோர் பலர்; இத்தேசத்திலே அவை செய்வோர் இலர். அம்மட்டோ, இங்குள்ளவர்கள் சுவாமி சந்நிதானங்களிலே இங்கிலிசுத் துரைமாரும் வண்டி குதிரையேறிக்கொண்டு போக விடார்கள். இந்தியாவிலே திருக்கோயில்களை மலஞ் சலம் எச்சில் முதலியவற்றினால் அசுசிப்படுத்துவோர் பலர்; இத்தேசத்திலே அப்படிச்செய்யத் துணிவோர் இலர். இந்தியாவிலே பெருந்தொகையாகிய ஆஸ்திகளையுடைய கோயில்களுள்ளும் நித்தியபூசை நியமமாக நடத்தப்படாக் கோயில்கள் பல; இத்தேசத்திலே பொருள் சிறிதுமில்லாச் சிறுகோயில்களுள்ளும் நித்தம் ஒருகாலப்பூசையேனும் நடத்தப்படாக் கோயில்கள் இல. இந்தியாவிலே பெரும்பான்மையோர்களுக்குக் காடன் மாடன் கறுப்பன் வீரன் பெரியதம்பிரான் முதலிய பிசாசுகளே குலதெய்வம்; இத்தேசத்திலே பெரும்பான்மையோர்களுக்கு எல்லாவறிவும் வல்லாமுதன்மையும் எல்லாவநுக்கிரகமுமுடைய நமது சுப்பிரமணியக்கடவுளே குலதெய்வம். இப்படிப்பட்ட சிலவிசேடங்கள் இத்தேசத்துக்கு இருக்கின்றன. இருந்தும் என்னை! முன் பேசப்பட்ட பல குறைவுபாடுகளினால் இவ்விசேடங்கள் பிரகாசிக்கவில்லை.

நம்மன்பர்களே! நெடுங்கால அநுபவத்தால் அறிந்த உண்மைகளைத் தேசாபிமானத்தினாலுஞ் சமயாபிமானத்தினாலும் உங்களுக்கு வெளிப்படுத்திய நம்மை உங்களுக்குப் பகைவரெனக்கொண்டு தூஷித்துத்திரியாது, மேலே பேசப்பட்ட குறைவுபாடுகளை விரைவில் அகற்றி, உங்கள் இகபர லாபங்களை அடையும்படி முயலக்கடவீர்கள். நம்மை நீங்கள் எப்படித் தூஷிக்கினும் உங்களுக்கு நன்மையாக முடிபவைகளை உங்களுக்கு வெளிப்படுத்துதற்கு நாஞ் சிறிதுந் தடைப்படாவண்ணஞ் சிவபெருமான் றிருவருள்செய்க. பொதுப்படப் பலருக்கும் நன்மைகளைச் சொன்னோம். திருந்த விருப்பமுடையவர் திருந்தட்டும்; திருந்த விருப்பமில்லாதவர் தமக்குப் பயன்படாதாயினும் பிறர் சிலருக்காயினும் பயன்படலாமே என்றெண்ணி வாய் மூடிக்கொண்டிருக்கட்டும். நாங்கள்

எப்படி நடக்கினும் நடப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்பார்க்கு, நாம் எப்படிக் கண்டிப்பினுங் கண்டிப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்போம். பிறர்செய்யும் அநீதிகளைக் கண்டித்தற்கு நீர் யார்! கடவுளோ அரசரோ என்பார்க்கு, கடவுள் கட்டளைக்கும் அரசர் கட்டளைக்கும் மாறாகவே பிறர்செய்யும் அநீதிகளை, அக்கட்டளைகட்கு அமைந்து, கண்டித்தலாகிய நமது நீதியைக் கண்டித்தற்கு நீர் யாரோ சற்றே பேசும் என்பேம். ஆகா! பலமனிதராலும் பகைக்கப்பட்டீர் இனிக்கெட்டீர் என்பார்க்கு, ஒகோ கடவுளுக்கஞ்சும் அச்சம் பெருகப் பெருக மனிதருக்கஞ்சும் அச்சங் குன்றிக் குன்றிவிடும் என்பதறியீர்போலும் என்போம். எவ்விதத்தானும் வாயெடுக்க ஒட்டேம் ஒட்டேம்.

இப்புத்தகத்திலே பேசப்பட்ட போலிக் கிறிஸ்தவர்களையும் போலிச் சைவர்களையும் போலிச்சைவகுருமாரையும் நாங்கள் அறிந்துகொள்ளல்வேண்டும் அவர்கள் பெயரைச் சொல்லவேண்டும் என்பீர்களாயின், நாஞ் சொல்லேஞ் சொல்லேம். குறிப்பாலாயினும் அறிந்துகொள்ளும்படி ஒருபாயஞ் சற்றே சொல்லலாகாதா என்பீர்களாயின், "பூசினிக்காயெடுத்தவனைத் தோளிலேதெரியும்" என்றாற்போல ஒருபாயஞ் சொல்வேங் கேளுங்கள். இப்புத்தகத்தை வாசிக்கும்பொழுதுங் கேட்கும்பொழுதும் வாய்முறுமுறுத்தலிலும் உதடு துடித்தலிலுங் கண் சிவத்தலிலும் முகங்கறுத்தலிலுஞ் சரீரம் படபடத்தலிலும் இடையில் எழுந்து ஓட்டம்பிடித்தலிலும் அவர்களை அறிந்துகொள்ளலாம்; விடாதேயுங்கள். இவை நிற்க.

இந்தியாவிலே சைவசமயிகளுள்ளுஞ் சைவசமயத்திலே உட்பற்றில்லாதவர் பலரேயாகவும், இவ்வியாழ்ப்பாணத்திலே கிறிஸ்துமதத்திற் புகுந்தவர்களுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றற்றவர் அரியராதலாகிய இத்துணை விசேடத்திற்குக் காரணந்தான் என்னையென்னிற் கூறுதும்; எத்துணைக்காலந் திருப்பித் திருப்பிப் படிப்பினுங் கேட்பினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுரா

ணத்துள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினால் இவர்களுள்ளத்தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம். இப்போதும் இருக்கின்ற ஒரு கிறிஸ்துசமய உபதேசியார் ஏறக்குறைய இருபத்தெட்டு வருஷத்துக்குமுன் நம்முள்ளே நால்வருடன் அந்தரங்கத்திற் கலந்து பேசியபோது "பைபில் வசனங்களெல்லாம் ஒருங்கு திரண்டுங் கந்தபுராணத்து அவைபுகுபடலத்தினும் அமைச்சியற் படலத்தினுமுள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களுள் ஒன்றனது ஓரடிக்குத்தானும் ஆற்றாது ஆற்றாது! என்ன அற்புதம் அற்புதம்" என்று கண்ணீர்வார உரோமஞ் சிலிர்ப்ப மிக்க ஆராமையோடு சொல்லினர். ஒரு கிறிஸ்தவர் ஏறக்குறைய நாற்பது வருஷத்துக்குமுன் ஒருநாட் கிறிஸ்துமதப் பிரசங்கஞ்செய்தபோது "பதிலக்கணம் பைபிலிலே எங்கேசொல்லியிருக்கின்றது! சைவருடைய சிவஞானசித்தியாரைப் பார்த்தாலன்றோ பதிலக்கணம் இனிதுவிளங்கும்" என்று பாதிரிமாருடைய நெஞ்சம் படபடெனத் தம்வசமிழந்து சொல்லினமையும், பின்பு அவரைப் பாதிரிமார் ஓரறையிற் கொண்டுபோய் இருத்திக் கண்டிக்க, அவர் "நான் என்மனச்சான்றுக்கு விரோதமாகப் பொய்பேசும்படி சொல்கின்றீர்களோ" என்று மேசையில் அறைந்தாரவாரித்தமையும், பலரும் அறிகுவர் அறிகுவர். ஒரு கிறிஸ்தவர் பாதிரிபள்ளிக்கூடத்திலே தம்மிடத்து விவிலியநூற் பாடங்கேட்ட சைவசமயப் பிள்ளைகள் சிலரை ஒருநாள் வேறாகப் புறத்திலேகொண்டுபோய் "நான் சிறுபிராயத்தில் அறியாமையினாலே கிறிஸ்துசமயப் படுகுழியில் விழுந்துவிட்டேன். பைபில் முழுதும் சிவஞானசித்தியாரில் ஒரு திருவிருத்தப் பாதிக்கும் ஈடாகாது. சிறுவர்களே, பைபிலினாலே மயங்கிக் குழியில் விழுந்து விடாதேயுங்கள்" என்றார். ஒரு கிறிஸ்தவர் வெகு சனங்களெதிரே இறக்கும்போது, தம்வசமிழந்து "பூதமுங் கணமும் பொறிகளும் புலனும் பொருந்தியகுணங்களோர் மூன்றும்—நாதமுங் கடந்த வெளியிலே நீயு நானுமாய் நிற்குமாறுளதோ—வாதமுஞ் சமய பேதமுங் கடந்த மனோகர வின்பசாகரனே—எதுமொன் றறியேன் யாதுநின் செயலே யிறைவனே யேகநாயகனே" என்னுந் திருவிசைப்பாவால் எமது சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து இறந்தனர். இவ்வுண்மையெ

ல்லாம் அறிந்தறிந்தன்றோ, பாதிரிமார்கள் "கிறிஸ்துமதம் எத்தேசத்திற் பரவினும் பரவும்; யாழ்ப்பாணத்தில் உள்ளபடி பரவாது" என்று அந்தரங்கத்திலே புலம்புகின்றார்கள். இவ்வியாழ்ப்பாணத்திலே நெடுங்காலம் வாசஞ்செய்துகொண்டு சைவசித்தாந்த பண்டிதர்களோடு பலகாலும் சமயவாதஞ்செய்து சைவசித்தாந்தத் துண்மையை அறிந்த சில பாதிரிமார்களுக்கு உட்பற்றுச் சைவசமயத்தினிடத்ததேயாம். இவ்வுண்மையை அவர்களோடும் அந்தரங்கத்திற் கலந்து சம்பாஷித்த விவேகிகளுக்கு இனிதுவிளங்கும். அப்பாதிரிமார்கள் நமது பெரியபுராணத்துச் சாக்கிய நாயனார்போலக் காலம் விட்டார்கள், விடுகின்றார்கள், விடுவார்கள். மனத்திலே நமது பதிரூப பரசிவத்தியானம்! வாக்கிலே தமது பசுரூப கிறிஸ்துமதப் பிரசங்கம்!!! சைவசித்தாந்திகளுடைய மணமும் வீசப்பெற்றறியாத மற்றையஞ்ஞானப் பாதிரிமார்கள் யாது செய்வார்கள்! பாவம் பாவம்!!!

இப்புத்தகத்தின் இங்கிலிசுமொழி பெயர்ப்பு விரைவில் அச்சிற் பதிப்பிக்கப்படும். இப்புத்தகத்திலே பேசப்பட்டவைகள் எல்லாமேனும் அவைகளுள்ளே பலவேனும் சிலவேனும் ஒன்றேனும் பொய்யென்று யாராயினுங் கண்டாராயின், அவர் புறங்கூறித்திரியாது உலகறியப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தக்கடவர்.

சைவசமயிகளே! இன்னும் ஒன்று சொல்லி முடிப்போம். தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது; மற்றொன்றாகிய திருக்கேதீச்சுரத்துக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத்திருக்கேதீச்சுரம் இவ்வடமாகாணத்தின்கணுள்ள மன்னாருக்கு அதிசமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத்திருக்கேதீச்சுரம் அழிந்து காடாகக்கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள்

கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகாஸ்தலத்தைச் சிறிதும் நினையாததென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லீருஞ்சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின், அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வர்.

திருச்சிற்றம்பலம்.

ஆங்கீரசஹு
ஐப்பசிமீ.
(கலி: ௪௯௭௪.)

சைவப்பிரகாசசபையார்.

ஒரு குறிப்பு:—

காலஞ்சென்ற காரைதீவு அருணாசல உபாத்தியாயர், சைவர்களைக் கிறிஸ்தவர்களின் சூழ்ச்சிகளினின்றுந் தப்புவித்தற்காகவே தமது உடல் பொருள் ஆவி மூன்றனையும் அர்ப்பணம் செய்தவர். அவருடைய சரித்திரச்சுருக்கம் மற்றொரு வெளியீட்டில் வெளிவரும். அவரைப்பற்றி அறிந்தவர்கள் தமக்குத் தெரிந்த சரித்திரக் குறிப்புக்களை இதனை வெளியிடுவோருக்குத் தெரிவித்துதவுவார்களாக.

பிழை திருத்தம்.

பக்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧	20	புகுநதவர்கள்	புகுந்தவர்கள்
௩	22	கோவில்கள்	கோயில்கள்
௧௪	8	திறிஸ்து	கிறிஸ்து
௧௬	21	கிறிஸ்தவராயும்	கிறிஸ்தவருக்குக் கிறிஸ்தவராயும்
௩௨	21	இத்தேச்த்திலோ	இத்தேசத்திலோ

கிறிஸ்துமதத்திலே வேதனநிமித்தம் பிரவேசித்த சிலரை

உடுவிலில் இருந்த பாதிரியார் ஒருவர் விலக்கியபோது

விலக்கப்பட்டார் கூற்றாகச்

சுன்னாகம் முத்துக்குமாரகவிராசரவர்கள் கூறிய

ஆசிரிய விருத்தங்கள்.

நல்லவழி காட்டுவோ முடுபுடைவை சம்பளம்
    நாளுநா ளுந்தருகுவோம்
நாஞ்சொல் வதைக்கேளு மெனமருட் டிச்சேர்த்து
    நானமுஞ் செய்துவிட்டார்
மெல்லமெல் லப்பின்னை வேலையிங் கில்லைநின்
    வீட்டினிடை போமென்கிறார்
வேண்டியொரு கன்னியைக் கைக்கொண்டு கருவாக்கி
    விட்டபின் கணவன்வேலை
இல்லைநீ போவென்று தள்ளுவது போலுமே
    இனியெம்மை யெம்முறவினோர்
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
    ஏர்ப்பூட்டி யுழவுமறியோம்
அல்லலா மிம்மைக்கு மறுமைக்கு நரகினுக்
    காளாகி மிகவழிந்தோம்
ஆபரா பரனே கிறிஸ்தவர்க ளெங்களை
    அடுத்துக் கெடுத்தார்களே.

வண்டியேன் மஞ்சமேன் கதிரையேன் குதிரையேன்
    வாங்குமெத் தைகள்சிவிகையேன்
வட்டித்த கவிகையேன் மல்லிகைச் செடிகளேன்
    வாழைகமு குயர்தோட்டமேன்
பெண்டிரேன் பிள்ளையேன் திரவியத் தேட்டமேன்
    பேணிவரு காணியினமேன்
பேரின்ப ஞானவழி யிதுகொலோ யேசுவும்
    பின்பற்று சீடருங்கைக்
கொண்டதோ விவையெலா மவர்நின்ற ஞானவழி
    கூறிநற் புத்திசொல்லிக்
குணமாக்க வல்லவிவர் பணமாக்க வந்தது
    குறிப்பறிந் தும்வறுமையாய்
அண்டினோ முண்ணவு முடுக்கவும் வாழவு
    மதற்குமங் கிடமில்லையே
ஆபரா பரனே கிறிஸ்தவர்க ளெங்களை
    அடுத்துக் கெடுத்தார்களே.